# பாசிச பாஜக ஒழிக




சகோதரன்

ஆர். அபுல் ஹஸன்

# பாசிச
# பாஜக
# ஒழிக

ஆர். அபுல் ஹஸன்

வெளியீடு

சகோதரன்.com
உங்களில் ஒருவன்

*139/77*, F-*5*, *2*வது தளம், IFT லேன்,
பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - *600 012*
தொலைபேசி : *044-2662 9441*
*மின்னஞ்சல் :* zs.tn@sio-india.org

**பாசிச பாஜக ஒழிக**
**© ஆர். அபுல் ஹஸன்**
முதல் பதிப்பு : ஏப்ரல் 2019

வெளியீடு : **சகோதரன்.காம்**
139/77, F-5, 2வது தளம், IFT லேன்
பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை – 12
☎ 044 2662 9441

நூல் வடிவம் &
அட்டை : **'1st Step' இம்ரான்** / 99419 98913

நன்றி:

**இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு (SIO)**

Paasisa Baajaka Ozhiga - (Tamil)
by R. Abul Hassan
Published by www.sagodharan.com,
139/77, F-5, 2nd Floor, IFT Lane,
Perambur High Road, Chennai - 12
Title Suggestion: N. Mohamed Ismail

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | *4* |
| | என்னுரை | *6* |
| *1* | கா(வி)வு கொள்ளப்படும் கல்வி.. | *9* |
| *2* | ஐந்து வருடங்களில் சிதைக்கப்பட்ட இந்தியக் கல்வித் துறை | *14* |
| *3* | பாஜக ஆட்சியும் அரசியலமைப்பு சாசனமும் | *21* |
| *4* | பெண்கள் பாதுகாப்பும் பாஜகவும் | *30* |
| *5* | மரணத்தால் மரத்துப் போகும் மனங்கள் | *36* |
| *6* | நஜீப் எங்கே.. ஒரு தாயின் கதறல் காதில் கேட்கவில்லையா? | *38* |
| *7* | பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த பாஜக.! | *45* |
| *8* | இந்திய முஸ்லிம்கள் டுடே | *48* |
| *9* | போராடுவது தீவிரவாதமா..? | *53* |
| *10* | கலைக்கப்படுமா கள்ள மௌனம்? | *57* |
| *11* | தேறுமா ஆறு மாதம்? | *62* |
| *12* | முரண் அரசும் பெரும்பான்மை அமைதியும்..! | *70* |

# பதிப்புரை

இந்தியா தற்போது ஒரு இக்கட்டான சூழலில் சிக்கியுள்ளது. வளர்ச்சியையும், ஒரு தனிநபரையும் முன்னிறுத்தி பல கவர்ச்சியான வாக்குறுதிகளை அள்ளி வீசி மக்களை மயக்கி ஆட்சியைப் பிடித்த பாஜக, ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றை செயல்படுத்திக் காட்டவில்லை, அதை விடவும் அந்த வாக்குறுதிகளுக்கு எல்லாம் எதிர்த்திசையில் ஆட்சியை நடத்தியதுதான் வேதனை.

கடந்த ஐந்து வருட பாஜக ஆட்சியில் இந்தியாவின் வளர்ச்சி எதிர்மறையாக இருந்துள்ளது. ஒரு சில தனியார் பெருநிறுவன முதலாளிகளும் அவர்களது தொழில்களுமே வளர்ச்சி அடைந்துள்ளன. அடித்தட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். தொடர் ஓட்டப்பந்தயத்தில் ஒருவர் கையில் பட்டயத்துடன் குறிப்பிட்ட தூரம் வரை ஓடி, பிறகு காத்திருக்கும் மற்றொருவரிடம் அதை கொடுத்து ஓட்டத்தைத் தொடர்ந்து பந்தய தூரத்தை நிறைவு செய்வார்கள். ஆனால் ஒரு வீரர் அந்த பட்டயத்தை வாங்கி, வந்த திசை யிலேயே பின்னால் திரும்பி ஓடினால் எப்படியிருக்கும்? அப்படித்தான் மத்திய பாஜக அரசு கடந்த ஐந்து வருடங்களில் இந்தியாவின் வளர்ச்சியை பின்னோக்கி இழுத்துச் சென்றுவிட்டது.

அனைத்து மக்களின் உயிர், உடைமைக்கு பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு அரசு, நாட்டில் ஒடுக்கப்பட்ட, சிறுபான்மையின

மக்கள் கொல்லப்பட்டபோது பாராமுகமாக இருந்ததுடன் அத்தகைய சம்பவங்களுக்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுக்கும் செயலில் ஈடுபட்டது மாட்டுக்கறி தடைச்சட்டம் மூலம். நாட்டின் பிரதமர் மக்கள் ப்ரச்னைகளுக்கு கருத்து தெரிவிக்காமல் நாடு நாடாக சுற்றுவதிலும், அங்கு சென்று பெருநிறுவன முதலாளிகளுக்கு வியாபார ஒப்பந்தம் பெற்றுத்தரும் தரகராகவும் செயல்பட்டார்.

இந்தி, சமஸ்கிருத திணிப்பு, பண மதிப்பழிப்பு, GST போன்ற சர்வாதிகாரத்தனமான திட்டங்கள், கல்வித்துறையில் வணிகமயமாக்கல், வகுப்புவாதமயமாக்கல், தனியார் மயமாக்கல், மாநில அரசுகளின் சுயாட்சி உரிமையைப் பறித்தல், அரசியலமைப்பை கேலிக்குரியதாக்கும் நடவடிக்கைகள், தவறுகளுக்கு பொறுப்பேற்காத தன்மை என்று ஆட்சி ஒரு மோசமான காட்சியாகவே இருந்திருக்கிறது. இந்த சூழலில்தான் மீண்டும் ஒரு தேர்தல் நடக்கவிருக்கிறது. இந்த தேர்தலில் பாஜக மீண்டும் வென்றால் இனி ஒரு தேர்தலை தேசம் சந்திக்க வாய்ப்பில்லை என்று பேசப்பட்டு வரும் சூழலில் இந்த தேர்தல் நடக்கிறது. இப்போது இந்த ஆட்சி அகற்றப்படவில்லை என்றால் மக்கள் ஒரு கொடுமையான சர்வாதிகார ஆட்சியில் விழப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனை தடுக்க வேண்டிய கடமை தேசநலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

அந்த முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. சகோதரர் அபுல் ஹசன் கடந்த ஐந்து வருடங்களில் பல்வேறு காலகட்டங்களில் எழுதிய கட்டுரைகளை தொகுத்து இந்த சிறிய மின்புத்தகம் உருவாக்கப் பட்டுள்ளது. இதனை படித்து, பிறரிடம் பரப்புவதன் மூலம் பாசிச ஆட்சி மீண்டும் ஏற்படாமல் இருக்க நம்மால் நகர்த்தப்பட்ட சிறுதுரும்பாக இருக்கும் என்ற அடிப்படையில் சகோதரன் இந்த புத்தகத்தை வெளியிடுகிறது.

இந்த புத்தகத்தை நாமும் படித்து, சார்ந்தவர்களிடமும் பகிர்வோம். தேசம் காப்போம்.

இவண்

ஆசிரியர் குழு, **சகோதரன்.com**

# என்னுரை

**சு**தந்திர இந்தியாவின் வரலாற்றில் எத்தனையோ தேர்தல்கள் கடந்து போயிருக்கின்றன. இதுவரை நடந்த தேர்தல்கள் கட்சிகளுக்கு இடையிலான தேர்தலாக மட்டுமே இருந்தது. ஆனால் வரலாற்றில் முதல்முறையாக தற்போது நடைபெற இருக்கும் இந்திய பாராளுமன்ற பொதுத் தேர்தல் சித்தாந்தங்களுக்கு இடையிலான தேர்தலாக இருக்கப் போகின்றது. இந்த தேர்தல் பாசிசத்திற்கும் ஜனநாயகத் திற்கும் இடையிலான ஒரு போராகவே கருதப்படுகின்றது. நடைபெற இருக்கும் இந்தப் போரில் பாசிசவாதிகள் வெற்றி பெறுவதை தடுக்க வேண்டும் என்று இந்தியா முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகள் போராடிக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஐந்து வருட கால பாஜக ஆட்சியில் இந்தியா எவ்வளவு முடியுமோ அவ்வளவு கபளீகரம் செய்யப்பட்டு உள்ளது. கல்வி, பொருளாதாரம், தேசப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, நீதித்துறை என்று அனைத்து துறைகளிலும் பாசிச பாஜக தனது கைவரிசையை காட்டி உள்ளது. விரும்பிய கல்வியைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை, விரும்பிய உணவை உண்ண முடியவில்லை, விரும்பிய மதத்தைப் பின்பற்ற முடியவில்லை, விரும்பிய வாழ்க்கை வாழ முடியவில்லை என்று மக்கள் தாங்கள் விரும்பியதை செய்ய முடியாத ஒரு இக்கட்டான சூழலுக்கு இந்த ஆட்சி தள்ளியுள்ளது.

ஒரே நாள் இரவில் மக்களை நடுத்தெருவிற்கு கொண்டு வந்தார் இந்த தேசத்தின் பிரதமர். சிறு குறு தொழில்கள் அனைத்தையும் முடக்கினார். அவரைப் பின்பற்றுபவர்களும் மக்களை நடுரோட்டில் அடித்துக் கொலை செய்பவர்களாக இருந்தனர். அரசை விமர்சித்தவர்கள் படுகொலை செய்யப் பட்டனர். பலர் மீது வழக்குகள் பாய்ந்தது. சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார்கள். அவரது கட்சியை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளே மக்களுக்கு பாதுகாப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 8 வயது சிறுமி கற்பழித்து படுகொலை செய்யப்பட்டார். பாஜகவின் வக்கீல்களும் மக்கள் பிரதிநிதிகளும் கொலையாளிகளுக்கு ஆதரவாக ஊர்வலம் சென்றனர். வழக்கை நடத்த விடாமல் நீதிமன்றத்தை முடக்கினர். 16 வயது பெண் பாஜக எம்எல்ஏவால் கற்பழிக்கப்பட்டார். அதனை தட்டிக் கேட்க வந்த அவரது தந்தை சிறைச்சாலையில் வைத்து கொல்லப்பட்டார். பாஜக பெண் எம்எல்ஏ தனக்கு பாதுகாப்பு இல்லை என்று சொந்த கட்சியினர் மீது சட்ட மன்றத்தில் புகார் தெரிவித்தார். அத்தனைக்கும் மேல் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மீதே பாஜகவினர் தங்கள் வெறுப்பை உமிழ்ந்தனர். ஆனால் இதனைத் தட்டிக்கேட்க வேண்டிய பிரதமரோ இது எதுவுமே தனக்கு தெரியாத மாதிரி வெளிநாடுகளில் பறந்து திரிந்து கொண்டிருந்தார்.


நாட்டின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்றுள்ள பிரதமர் மிகப்பெரிய ஊழலில் சிக்கியுள்ளதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவிக்கின்றனர். கடும் பாதுகாப்பு சோதனைகளையும் தாண்டி இந்திய ராணுவ வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 40 ராணுவ வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த செய்தியை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டிய பிரதமர் தொலைகாட்சி படப்பிடிப்பில் இருந்தார். இன்னும் இன்னும் எழுதுவதற்கு ஏடுகள் பத்தாத வகையில் ஒட்டுமொத்தமாக மக்கள் விரோத அரசை கடந்த ஐந்து வருடங்களாக சந்தித்து வருகின்றோம். அடுத்த முறையும் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தியா ஜனநாயக நாடு என்ற அந்தஸ்தை இழந்து சர்வாதிகார தேசமாக மாறும் அபாயம் இருப்பதாக அரசியல் நோக்கர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இன்றைய சூழலில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்கு மிகப் பெரிய உழைப்பும், முயற்சியும் தேவைப்படுகிறது. அதனடிப்படையில் என்னால் ஆன சிறு முயற்சியாக கடந்த ஐந்து வருடங்களாக பல்வேறு காலகட்டங்களில் மத்திய அரசு குறித்தும், இந்த ஆட்சியில் அரங்கேறிய மக்கள் விரோத சம்பவங்கள் குறித்தும் நான் எழுதிய கட்டுரைகளை தொகுத்து சிறிய மின் புத்தகமாக வெளியிட முடிவு செய்தேன். அந்த சிந்தனை வடிவம் பெற்று தங்கள் அலைபேசி திரைகளில் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் சமரசம், சமூக உயிரோட்டம் போன்ற பத்திரிகைகளிலும், கீற்று, சத்தியமார்க்கம், சகோதரன் போன்ற இணைய இதழ்களிலும் பிரசுரமானவை. (பழைய கட்டுரைகள் என்பதால் சில இடங்களில் தகவல்கள் அந்த கால சூழல்களுக்கு தகுந்தாற்போல் இருக்கும்) அனைத்துமே தரமான, ஆழமான கட்டுரைகள் என்று சொல்லமாட்டேன். ஆனால் அந்தந்த காலகட்டங்களின் ப்ரச்னைகளை என்னால் இயன்ற அளவிற்கு வலிமையாக வெளிப்படுத்த முயற்சித்திருக்கிறேன்.

நூல் குறித்த தங்களது கருத்துகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

**அபுல் ஹசன்**
jeraabu.88@gmail.com
*9597739200*



# 1

# கா(வி)வு கொள்ளப்படும் கல்வி..

இந்தியாவின் அலுவலகப் பூர்வமான தலைநகரம் புதுடில்லியாக இருக்கலாம். ஆனால் நிதர்சனத்தில் அதிகாரப்பூர்வமாக இந்திய அரசு நாக்பூரில் இருந்தே இயங்குகின்றது. கொள்கை உருவாக்கங்கள், அரசு முடிவுகள், அதிகாரப் பகிர்வுகள், உயர் பதவிகளுக்கான நியமனங்கள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ் தலைமையின் ஒப்புதலுக்கு பிறகே முடிவு செய்யப்படுகின்றது. உண்மையில் நரேந்திர மோடி ஒரு முகமூடி மட்டுமே. அந்த முகமூடிக்கு உள்ளே இருக்கும் உண்மை முகம் RSSன் முகமே.

ஆர்.எஸ்.எஸ் உருவாக்கப்பட்டு நூறு வருடங்களை நெருங்கி வரும் சூழலில், சிறிது சிறிதாக இந்தியாவின் ஏகபோக அதிகாரம் அவர்களின் கைகளுக்குள் செல்வது போன்ற தோற்றம் மூன்று வருடங்களுக்கு முன்பு சிறு புள்ளியாக இருந்து உ.பி தேர்தல் வெற்றி மூலம் பூதாகரமாகி நிற்கின்றது. தற்போது 16 மாநிலங்களில் அவர்களது ஆட்சி பரந்து விரிந்து கிடக்கின்றது. அதிகார வெறி எவ்வளவு தலைக்கேறியிருந்தால் ஆட்சியமைக்க தகுதியே இல்லாத மணிப்பூர், கோவா போன்ற மாநிலங்களில் கூட ஆட்சியைக் கைப்பற்றி இருப்பார்கள். தமிழகத்திலும் புறவாசல் வழியாக ஆட்சியை நிர்ணயிக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பது இந்தியாவைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற பேராசைத் திட்டத்தின் ஒரு அங்கமாகவே நம்மால் பார்க்க முடிகின்றது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒரு முறைமை என்றால் கல்விமுறை, இந்திய வரலாறு இவற்றை தங்களது செயல்திட்டத்திற்கு ஏற்ப மறுஆக்கம் செய்வது, தேச வளர்ச்சியில் மற்றவர்களது பங்களிப்பை அழித்து சிறு ஆணியைக் கூட நகர்த்தாத தங்கள் முன்னோடிகளை பிரதானப்படுத்துவது, அழிக்க முடியாதவர்களை தங்களைச் சார்ந்தவர்களாக பிம்பப்படுத்துவது என்று எல்லா வழிமுறைகளையும் பின்பற்றி எப்படியாவது தங்களை உத்தமர்கள் என்று உலகின் கண்களுக்கு காட்டிவிட பகீரத முயற்சிகளை எடுத்துவருகின்றனர்.

இந்திய வரலாற்றை புராணங்களின் அடிப்படையில் மாற்றி எழுதுவது RSSன் நூற்றாண்டு கால கனவுத் திட்டங்களில் ஒன்று., இதற்காக பல்வேறு குழுக்களையும், ஆராய்ச்சி துறைகளையும் ஏற்படுத்தி, இந்திய, உலக நூலகங்களில் இருந்து தகவல்களை திரட்டி வருகின்றனர். மூன்று வருடங்களுக்கு முன்பு மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு NCERT புத்தகங்களை இணையத்திலிருந்து பலரும் பதிவிறக்கம் செய்யத் துவங்கிவிட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. காரணம் வரலாற்றைத் திரித்து எழுதும் முயற்சியின் ஒரு அம்சமாக பாட புத்தகங்களில் உள்ள வரலாற்றுத் தரவுகளை மாற்றி எழுதப் போவதாக தகவல்கள் பரவியதே.

இந்திய வரலாற்றைத் திரித்து தங்களுக்கு ஏற்ப மறு ஆக்கம் செய்யும் பாஜக, சங்க பரிவாரங்களின் முயற்சி பள்ளிப் பாடத்திட்டத்தில் துவங்கிவிட்டதாகவே கல்வியாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். மத்திய அரசு பதவியேற்றதும் மனித வளத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி, பண்டைய இந்து சாத்திரங்கள் பள்ளிப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று திருவாய் மொழிகின்றார். அவர் சொன்ன அடுத்த சில தினங்களில் குஜராத் ஆர்.எஸ்.எஸ். பெருந்தலைகளில் ஒருவரான தீனநாத் பத்ரா ஸ்மிருதியின் அலுவலகத்திற்கு 'விழுமங்களையும் தேசியவாதத்தையும்' மாணவர்களிடையே விதைக்கும் வகையில் பள்ளிக் கல்வித் திட்டம் மாற்றப்பட வேண்டும் என்று முன்மொழிவுகளை அனுப்புகின்றார். அத்தோடு இந்திய தேசியத்தை

அடிப்படையாகக் கொண்ட நவீனத்தையும், தேசபக்தியையும் வளர்க்கும் வகையில் NCERT புத்தகங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று பிரதமரிடம் முறையிடப்போவதாகக் கூறுகின்றார்.

இந்த தீனநாத் பத்ரா, வாஜ்பாய் அரசில் மனித வளத் துறை அமைச்சராக இருந்த முரளி மனோஹர் ஜோஷியால் கல்வித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநில அரசுகளால் நிராகரிக்கப்பட்ட மாற்றங்களின் முன்னோடியும் கூட. உபநிஷதங்கள் மற்றும் வேதங்களைப் போன்ற புராதன இலக்கிய படைப்புகளை ஆய்வு செய்வதற்கும், விஞ்ஞானம், கணிதம் மற்றும் தத்துவ துறைகளில் இந்து மதத்தின் பங்களிப்புகளை சிறப்பித்துக் காட்டும் பொருத்தமான நூல்களை அடையாளம் காண்பிக்கும் ஒரு குழுவையும் ஸ்மிருதி இராணி பதவி ஏற்றதும் அமைத்துள்ளார். இந்து மத பொற்காலத்தை உள்ளடக்கிய பாடத்திட்டங்களை உருவாக்குமாறும் அதிகாரிகள் பணிக்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இத்தோடு நில்லாமல் தரமான கல்வியை நாட்டின் குடிமக்களுக்கு வழங்க வேண்டும் என்ற போர்வையில் TSR சுப்ரமணியன் குழுவை அமைத்து புதிய கல்விக் கொள்கையினை உருவாக்கியுள்ளனர். ஆனால் உள்ளே உள்ளது அத்தனையும் காவிக் குப்பை. கல்வியில் மாநிலங்களுக்கு உள்ள உரிமையை மறுத்தல், குலக்கல்வி முறையை ஊக்குவித்தல், வெளிநாட்டு பல்கலைக் கழகங்களை இந்தியாவில் கடைவிரிக்கச் செய்து கொஞ்ச நஞ்சமுள்ள அரசுக் கல்வித் தரத்தைக் காயடித்தல் இவையே புதிய கல்விக் கொள்கையின் உன்னதமான நோக்கங்கள். நாட்டின் பல பகுதிகளில் குறிப்பாக வட மாநிலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு, போதுமான ஆசிரியர் எண்ணிக்கை, தரமான கல்விச் சூழல் இல்லை. படிப்பை பாதியில் நிறுத்தும் விகிதாச்சாரம் குறைந்தபாடில்லை. ஆனால் இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் பொறுப்பேற்றவுடன் கல்வித்துறையை இந்துமயமாக்க வேண்டும் என்று இவ்வளவு வெளிப்படையாக ஒரு அமைச்சரே சொல்கிறார் என்றால் எந்த அளவிற்கு

அவர்களது இரத்தநாளங்களில் காவிமயமாக்கும் வெறி புரையோடியிருக்கின்றது என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

உயர்கல்வித்துறையில் உலக அளவில் இந்தியாவின் எந்த கல்வி நிறுவனமும் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆராய்ச்சி, புத்துருவாக்கங்களில் இந்தியா மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதே அதற்குக் காரணம். ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் செயல்களைச் செய்ய வேண்டிய அரசு, ஆராய்ச்சி மாணவர்களின் உயிரை எடுப்பதில் குறியாக செயல்படுகின்றது. தேசிய பல்கலைக் கழகங்களில் பயிலும் சிறுபான்மை, ஒடுக்கப்பட்ட மாணவர்களை செயல்பட விடாமல் பாஜகவின் மாணவ அமைப்பான ABVP குண்டர்களை ஏவி தடுப்பதுடன், போராட்டங்களில் ஈடுபடும் மாணவர் களை ஒடுக்க மதிப்பெண் முறையிலும் கைவைத்து சர்வாதிகாரத்தை வெளிப்படுத்துகின்றனர். காவி எதேச்சதிகாரத்திற்கு ரோஹித் வெமுலா, முத்துகிருஷ்ணன் என்ற இரண்டு தலித் ஆராய்ச்சி மாணவர்கள் இதுவரை இரையாகியுள்ளனர். நஜீப் என்ற முஸ்லிம் மாணவன் எங்கே சென்றார் என்ற கேள்விக்கு இதுவரை விடையில்லை. கன்ஹையா குமார், உமர் காலித் என்ற இடதுசாரி மாணவர்கள் வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ABVPயை எதிர்த்து குரல் கொடுத்ததற்காக கற்பழிப்பு மிரட்டலுக்கு ஆளானார் குர்மேகர் கவுர் என்ற மாணவி. இந்த கொடுமை களுக்கு எல்லாம் அரசு, காவல்துறை, பல்கலைக் கழக நிர்வாகம் என்று அனைவரும் உடந்தையாக இருப்பதே கொடுமைகளின் உச்சம்.

கல்வித்துறையில் மாநில அரசுகளுக்கு பல்வேறு உரிமைகள் அரசியலமைப்பு சட்டத்தால் வழங்கப் பட்டுள்ளது. மத்திய அரசு அந்த உரிமைகளைப் பறிப்பதில் மும்முரமாக செயல்பட்டு வருகின்றது. மருத்துவப் படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வு இல்லை என்ற தமிழக அரசின் உரிமையினைப் பறித்து தேசிய தகுதி, நுழைவுத் தேர்வு – NEET என்ற சர்வாதிகார நடைமுறையினை தமிழகம் போன்ற மாநிலங்கள் மீது திணித்து, மருத்துவப் படிப்பை மாநிலவழிக் கல்வியில் பயின்ற மாணவர்களுக்கு எட்டாக்

கனியாக ஆக்க முயற்சிக்கின்றது. மத்திய பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்களையும், பிற மாநில மாணவர்களையும் தமிழகத்தில் கல்வி பயிலச் செய்வதன் மூலம் கிராமப்புற தமிழக மாணவர்களின் உரிமை மறுக்கப்படுகின்றது. அதோடு இளநிலை மருத்துவம் பயின்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு முதுநிலை படிப்பில் வழங்கப்பட்டு வந்த 50% இட ஒதுக்கீட்டையும் ரத்து செய்து தன்னிச்சையாக அறிவித்து கிராமப் புற மக்கள் தரமான மருத்துவம் பெறுவதிலும் முட்டுக்கட்டை போடுகின்றது ஆளும் பாஜக அரசு.

இன்று பல்கலைக்கழகங்கள், கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் இவற்றின் தலைமைப் பொறுப்பிற்கு வர வேண்டும் என்றால் கல்வித் தகுதி, அனுபவம் இவற்றைத் தாண்டி நாக்பூருடன் நெருக்கம் என்ற தகுதி மிகவும் அவசியமானது. ஹைதராபாத் பல்கலைக் கழகம், ஜேன்யூ பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், இந்திய அறிவியல் வரலாற்றுக் கழகம் என்று முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகளை இப்போது அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள் RSS முக்கியஸ்தர்கள்தான். அதாவது தேசத்தை நிர்ணயிக்கும் முடிவுகளை எடுக்கும் இடங்களில் எல்லாம் தங்களைச் சார்ந்தவர்கள் இருந்தால் தான் தங்கள் சர்வாதிகாரம் எடுபட முடியும் என்பதை உணர்ந்து அதற்கான வேலைகளை கனகச்சிதமாக செய்துள்ளனர்.

இப்படி பள்ளிக்கல்வியில் ஆரம்பித்து, உயர்கல்வி, மருத்துவம், வரலாறு, தத்துவம், அரசியல், அதிகார வர்க்கம் என்று அத்தனை துறைகளையும் தனது ஆக்டோபஸ் கரங்களால் கபளிகரம் செய்ய வீரியமாக செயல்படுகின்றது நாக்பூரில் இருந்து இயங்கும் ஆர்.எஸ்.எஸ் அரசு. எதிரி யார் என்று மட்டும் சொல்லிக் கொடுப்பதுடன் நமது கடமை ஓய்ந்து விடுவதில்லை. அவர்களின் திட்டத்தைப் பற்றிய அறிவிருந் தால்தான் அதனை முறியடிக்கும் மாற்று திட்டத்தை சிந்தித்து, செயல்படுத்த நாமும், எதிர்கால சந்ததியும் தயாராக முடியும்.

அறியச் செய்வோம்... தயார்படுத்துவோம்... முறியடிப்போம்..



# 2

# ஐந்து வருடங்களில் சிதைக்கப்பட்ட இந்தியக் கல்வித் துறை

**க**ல்வி என்பது மூடநம்பிக்கை, வன்முறை, வெறுப்பு இவற்றிலிருந்து விடுபட்டு தேசிய ஒற்றுமை, சமூக ஒருமைப்பாடு, மத நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் முக்கிய காரணியாக அமைய வேண்டும். கல்வியின் மூலம் ஒழுக்கம், நேர்மறை எண்ணம், மனித விழுமங்களை தனிநபர் இடத்திலும், சமுதாயத்திலும் உருவாக்குவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்த வார்த்தைகள் 2014இல் பாஜகவின் தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றிருந்தவை. ஆனால் கடந்த ஐந்து வருட ஆட்சியில் இந்த வார்த்தைகள் பாஜக அகராதியில் வேறு பொருள்கொண்டவை அல்லது மற்ற எல்லாவற்றையும் போலவே இவையும் ஜூம்லாஸ் அதாவது பொய்யானவை. கடந்த ஐந்து வருடங்களில் ஹைதராபாத் மத்திய பல்கலைக் கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புனே திரைப்படக் கல்லூரி, ஐஐடி சென்னை, பனராஸ் இந்து யுனிவர்சிட்டி, ஜாமியா மில்லியா இஸ்லாமியா என்று அதிகார வர்க்க தாக்குதல்கள், ஜனநாயக மாண்புகளை அழித்தல், எதிர்த்து எழும் குரல்களை நசுக்குதல் போன்ற நடவடிக்கைகளில் பாஜக அரசு ஈடுபட்டது. உண்மையில் ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதல்கள் என்பவை கடந்த

ஐந்து வருட ஆட்சியில் கல்வித்துறையில் நிகழ்ந்த சாதனைகளில் ஒரு பகுதி மட்டுமே.

பாஜக தலைமையிலான மத்திய அரசு கல்வித் துறையில் வணிகமயமாக்கல், அதிகாரக் குவிப்பு, வகுப்புவாத மயமாக்கல் இவற்றை மூர்க்கத்தனமாக நடைமுறைப்படுத்து கிறது. சென்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நவீன தாராளமய கொள்கைகளை வீரியமாக நடைமுறைப்படுத்து வதன் மூலம் கல்வித்துறையின் ஒழுங்கமைப்பை சிதைத்து, தனியார் முதலாளிகளுக்கு இலாபத்தை அதிகப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதேநேரத்தில் கல்வித் துறையின் கூட்டாட்சி தன்மையை நீர்த்துப்போக செய்வதன் மூலம் மத்தியில் அதிகாரத்தை குவித்து இந்துத்துவ செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர். கல்வித் துறையின் முக்கியமான பதவிகளில் ஆர்எஸ்எஸ் சித்தாந்தவாதிகளை நியமித்ததன் மூலமும், வரலாற்றை திருத்தி எழுதுதல், அபத்தமான, பகுத்தறிவிற்கு ஒவ்வாத மாற்றங்களை கல்வித்திட்டத்தில் புகுத்துதல், போலித்தனமான அறிவியல் பரப்புரை இவற்றின் மூலம் தங்கள் செயல் திட்டங்களை நிறைவேற்ற நினைக்கின்றனர். இத்தகைய முயற்சிகள், தாக்குதல்கள் அனைத்தும் சமூக-பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மாணவர்களை நேரடியாக பாதிக்கிறது.

## புதிய கல்விக் கொள்கை :

மோடி அரசு பதவியேற்று நூறு நாட்களுக்குள்ளாக புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த போவதாக அறிவித்தது. புதிய கல்விக் கொள்கை கல்வித்துறையில் நீடித்து வரும் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அமையும் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் புதிய கல்விக் கொள்கை நம் கண்களுக்கு எங்கும் தென்படுவதாக இல்லை. அவ்வப்போது வெளியிடப்பட்ட கல்விக் கொள்கையின் வரைவுத் திட்டங்களும் தனியார் மயமாக்கல், வணிகமயமாக்கல், வகுப்புவாத மயமாக்கல் இவற்றை தூக்கிப் பிடிப்பதாகவே

அமைந்துள்ளன. இந்த புதிய கல்வித் திட்டமானது அரசியல் அமைப்பு சட்டம் வலியுறுத்தும் பொதுக் கல்வி முறைக்கு எதிராக அமைந்துள்ளது. தனியார் கட்டணக் கொள்ளை மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கும் இந்த சூழலில் மாணவர்கள் அந்த கட்டணக் கொள்ளையை நிர்வகிக்க மத்திய அளவிலான கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்த வேண்டும் என்று போராடி வரும் நிலையில் அதனைப் பற்றிய எந்த குறிப்பும் புதிய கல்விக் கொள்கையில் இல்லை.

## கல்விக்கான நிதி குறைப்பு :

பாஜக தனது தேர்தல் வாக்குறுதியில் கல்விக்கான நிதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6 சதவீதமாக இருக்கும் என்று அறிவித்திருந்த நிலையில், இந்த 5 வருடங்களில் பட்ஜெட்டில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு என்பது மிகவும் குறைவாகவே இருக்கிறது. மத்திய அரசாலும் மாநில அரசு களாலும் செலவிடப்படும் கல்விக்கான நிதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7% சதவீதமாக மட்டுமே உள்ளது.

## நவீன தாராளமயமாக்கல் :

கண்ணுக்குத் தெரியும் இந்த தாக்குதல்களோடு இல்லாமல் கண்ணுக்குத் தெரியாமல் மத்திய அரசு பொதுக்கல்வி முறையை ஒழிப்பதற்கான வேலையில் சத்தமில்லாமல் இறங்கியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் கல்வித்துறையில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட பல்வேறு நிறுவனங்களை மத்திய அரசு கலைத்துள்ளது. பல்வேறு வகைகளில் கல்விக்காக நிதி ஒதுக்கப்பட்டு வந்த முறைமை மாற்றப்பட்டு RashtriyaUchhtar Shiksha Abhiyan (RUSA) என்ற அமைப்பு மூலம் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ஒருமயப்படுத்தப்பட்டது. இதன் மூலம் நிதி ஒதுக்கீடு என்பது பல்வேறு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக மாற்றப்பட்டு அந்த நிபந்தனைகளை நிறைவேற்ற தவறும்போது நிதி ஒதிக்கீடு முற்றிலுமாக நிறுத்தப்படும் சூழலும் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த நிதி ஒதுக்கீடு என்பது கல்வி நிறுவனங்களின் செயல்பாட்டைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும் சூழலும் உருவாக்கப்

பட்டுள்ளதால் மாநில அரசுகளும், மாநில அரசுகளால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களும் தங்களுக்கான கல்வியை வடிவமைக்கும் உரிமை முற்றிலுமாக பறிக்கப் பட்டது. சென்ற வருடம் 60 மத்திய அரசு கல்வி நிறுவனங்களுக்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் கல்வித் துறையில் தனியார் மயமாக்கல் இன்னும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. இந்த தன்னாட்சி அந்தஸ்து மூலம் பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங் களும் தாங்கள் விரும்பும் கல்வித் துறைகளை புதிதாக சேர்க்கவும், தாங்கள் விரும்பிய இடங்களில் கிளைகளைத் திறக்கவும் முடியும். ஆனால் மத்திய அரசிடம் இருந்து இதற்காக எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்படாது. விளைவு அதற்கான முழு சுமையும் மாணவர்கள் மீது இறக்கப்படும். இதன்மூலம் பெரிய கல்வி நிறுவனங்கள் பட்டதாரிகளை உருவாக்கும் கடைகளாக மாறும் சூழ்நிலை ஏற்படும், பணக்காரர்கள் மட்டுமே பயன் பெறுவதாகவும், ஏழைகள் முற்றிலும் ஒதுக்கப்படும் சூழலும் உருவாகும். தன்னாட்சி அந்தஸ்து என்பதே கல்வித்துறையில் தனியார்மயத்தை ஊக்குவிக்கும் ஒரு உபகரணமே அன்றி வேறில்லை.

## பொதுக்கல்வி முறையை ஒழித்தல் :

கடந்த சில காலமாகவே பொதுக் கல்வி முறை என்பது சிறிது சிறிதாக முக்கியத்துவம் இழந்து வரும் சூழலில் கடந்த ஐந்து வருடங்கள் அதன் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. ராஜஸ்தான் அரசு 225 பள்ளிகளை Public Private Partnership (PPP) மூலம் தனியார்மயமாக்க முடிவெடுத்தது. மத்திய பிரதேச அரசு 15000க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளையும், மத்தியபிரதேச அரசு 13000க்கும் மேற்பட்ட பள்ளிகளையும் மூட முடிவு செய்தது. தமிழ்நாடு, ஹரியானா, இமாச்சல் போன்ற மாநிலங்களிலும் அரசுப் பள்ளிகளை மூட முடிவு செய்யப்பட்டது. ஆனால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார்கள் என்ற நிலையில் அதனை மாற்றுவதற்கும், ஆசிரியர்களை நியமிப்பதற்கும் எவ்வித முயற்சிகளும் இல்லை.

## மானியங்களை கடனாக மாற்றுதல் :

*2018-2019 நிதிநிலை அறிக்கையில் கல்விக்கான மானியங்களை கடன் முறையாக மாற்றுவது குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது.* Higher Education Funding Agency (HEFA) *மூலம் கல்வி நிறுவனங்களுக்கு 10 வருட கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்த கடனை நிறுவனங்கள் மாணவர்களிடம் இருந்து பெறும் கட்டணம், ஆராய்ச்சி கட்டணம் போன்றவை மூலம் திருப்பி செலுத்த வேண்டும் என்று* HEFA *வலியுறுத்துகிறது. ஆக மீண்டும் அந்த சுமையை கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் மீதே திருப்பும் என்பது தெளிவு.*

## ஆராய்ச்சி மற்றும் உயர் கல்வி முறையின் ஒழுங்கமைப்பை சீர்குலைத்தல் :

UGC *மற்றும்* AICTE*க்கு பதிலாக உயர்கல்வி ஆணையத்தை அறிமுகப்படுத்தும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் திட்டம் உயர்கல்வியை லாபம் ஈட்டும் தொழிலாக மாற்றும் மத்திய அரசின் நோக்கமாக பார்க்கப்படுகிறது. ஆராய்ச்சி படிப்புக்கான நிதி வெகுவாக குறைக்கப் பட்டுள்ளது. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் படிப்புக்கான இடங்கள் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டின் பல பல்கலைக் கழகங்களில் பல்வேறு பணியிடங்கள் நிரப்பப் படாமல் இருப்பதன் மூலம் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் மறுக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.*

## பின்தங்கிய வகுப்பில் இருந்து வரும் மாணவர்களை புறக்கணித்தல் :

*மத்திய அரசின் கல்விக் கொள்கைகள் நாட்டின் பின்தங்கிய வகுப்பில் இருந்து வரும் மாணவர்களை வெகுவாக பாதிக்கின்றது. எஸ்சி, எஸ்டி வகுப்பினருக்கான விடுதிகள் பல்வேறு மாநிலங்களில் மூடப்பட்டுள்ளது அல்லது தனியார் மயமாக்கப்பட்டு உள்ளது. இத்தகைய விடுதிகளின்*

பராமரிப்பும் அங்கு உள்ள வாழ்நிலையும் மிகவும் மோசமாக உள்ளது. பின் தங்கிய மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையிலும் தொடர்ந்து கை வைக்கப்பட்டு வருகிறது. ஒரு ஆய்வறிக்கையின் படி கடந்த மூன்று வருடங்களில் எஸ்சி மாணவர்களுக்கு 8,000 கோடி கல்வி உதவித் தொகையும், எஸ்டி மாணவர்களுக்கு 3156 கோடி கல்வி உதவித்தொகையும் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பில் இருந்து வரும் மாணவர்களை கல்வியில் முன் கொண்டு வருவதற்கான பல்வேறு அமைப்புகள் போதிய நிதி அளிக்கப்படாமல் மூடப்படும் நிலையில் உள்ளன. பணியிடங்களை நிரப்புவதிலும் பின்தங்கிய வகுப்பில் இருந்து வருபவர்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படும் வகையில் விதிகள் மாற்றப்பட்டுள்ளன.

## கல்வியில் வகுப்புவாத மயமாக்கல்:

மத்திய அரசின் கல்விக் கொள்கைகளில் வகுப்புவாத மயமாக்கல் என்பது ஒரு உள்ளார்ந்த அம்சமாகவே கடந்த ஐந்து வருடங்களில் இருந்து வந்துள்ளது. தீனநாத் பத்ரா போன்ற RSS சித்தாந்தவாதிகள் பள்ளிக்கல்வி கொள்கைகள், கல்வித் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே பாஜக ஆளும் மாநிலங்களில் பள்ளி கல்வித் திட்டங்களில் வகுப்புவாதம் திணிக்கப்பட்டுள்ளது. அதனை தேசிய அளவில் விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொண்டுள்ளனர். இந்திய அறிவியல் மாநாட்டிலும், இந்திய வரலாற்று மாநாட்டிலும் உண்மைக்குப் புறம்பான போலியான அறிவியல் தகவல்களை பிரதமர் மோடி உட்பட பலரும் பரப்பியதை அனைவரும் அறிவர்.

மொத்தத்தில் கடந்த ஐந்து வருடங்களில் பாஜக ஆட்சியில் கல்வித்துறை முற்றிலுமாக சீரழிக்கப்பட்டுள்ளது. மக்கள் விரோதத் திட்டங்களை கவர்ச்சியான பெயர்களில் அறிமுகப்படுத்தி மக்களை ஏமாற்றும் கலையில் பாஜக அரசு

நிபுணத்துவம் பெற்றுள்ளது. பணமதிப்பழிப்பு, ஜிஎஸ்டி, கிளீன் இந்தியா, மேக் இன் இந்தியா என்று பல்வேறு பெயர்களில் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே கல்வித்துறையிலும் மக்கள் விரோத திட்டங்களை கவர்ச்சியான பெயர்களில் அறிமுகப்படுத்த மத்திய அரசு முயற்சி செய்தது. தோல்வியடைந்த திட்டங்களை ஏகலைவா ஸ்கூல்ஸ், HEERA, HEFA என்று பல்வேறு பெயர்களில் அறிமுகப்படுத்தியது. ஆனால் கல்வித்துறையில் பணிபுரிபவர்களும், மாணவர்களும் இத்தகைய கொள்கைகளுக்கு எதிராகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளனர். மத்திய அரசும் இந்த ஐந்து வருடங்களில் பல்வேறு சமயங்களில் மாணவர்களுக்கு விரோதமாகவே நடந்து கொண்டது. எதிர்த்து எழும் குரல்களை நசுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. கடந்த ஐந்து வருடங்களில் மத்திய பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் தன்னெழுச்சியாக மாணவர்கள் இந்த அரசுக்கு எதிராக திரண்டெழுந்தனர். மத்திய அரசை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு இந்த தேர்தலிலே மாணவ சமுதாயம் மிகப்பெரிய பங்காற்றப் போகின்றது. ஆனால் வெறுமனே அரசையும் ஆட்சியையும் மாற்றுவது மட்டுமே இந்த மாணவர்களது நோக்கமாக இருக்கவில்லை, மாறாக அவர்களுக்கு விரோதமான கல்வி கொள்கையையே மாற்றுவதுதான் மாணவர்களுக்கு உகந்தது.

★ ★ ★



# 3

# பாஜக ஆட்சியும் அரசியலமைப்பு சாசனமும்

இந்தியா சுதந்திரமடைந்து இத்தனை வருடங்களில் இதுவரை பேசப்படாத அளவிற்கு ஜனநாயகம் பற்றியும் அரசியலமைப்பு சட்டத்தைப் பாதுகாப்பது பற்றியும் நாடு முழுவதும் பேசப்பட்டு வருகிறது. ஜனநாயகம் என்பது சாதி, மத, வர்க்க பேதமின்றி அனைத்து தரப்பு மக்களும் சமமான உரிமைகளையும், பங்களிப்பையும், அதிகாரப் பகிர்வையும் பெற வழிவகுக்கிறது. இந்த ஜனநாயகத்தை உறுதி செய்யும் பொறுப்பை அரசியல் அமைப்பு சட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாஜக ஆட்சியை நாம் மீளாய்வு செய்து பார்க்கும்போது இந்தியாவில் எவ்வாறு ஜனநாயகம் சிதைந்து கொண்டிருக்கிறது என்பதையும், அரசியல் சாசனம் எப்படி நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் நம்மால் உணர முடியும்.

இந்த துறை, அந்த துறை என்றில்லாமல் சகட்டுமேனிக்கு எல்லாத்துறைகளிலும் தனது ஆக்டோபஸ் கரங்களை அகல விரித்து வைத்திருக்கும் பாசிச ஆட்சியால் தெருவில் திரியும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் கணக்கற்ற பொத்தல்கள் கொண்ட ஆடையைப் போல இந்தியா இந்த ஐந்து வருடங்களில் கிழிக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்த ஆட்சி தொடர்ந்தால் முழு ஆடையும் கிழிக்கப்பட்டு நிர்வாணமாக்கப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை.

பக்தர்களின் பாசையில் சொல்ல வேண்டுமானால் அவர்களது பாரதத்தாய் பாசிச வெறி பிடித்த நாய்களால் கடித்துக் குதறப்பட்டு மரணத் தருவாயில் போராடிக் கொண்டிருக்கிறாள்.

அரசியலமைப்பு சட்டத்தின் மீதான பாஜகவின் தாக்குதல் இந்த ஆட்சியில் மட்டும் நடப்பதல்ல. தவறான இடத்தில் இருந்த சரியான நபர் என்று சொல்லப்பட்ட வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலேயே அரசியலமைப்பு சட்டத்தை மாற்றப்பட வேண்டிய, இறக்குமதி செய்யப்பட்ட சிந்தனை களின் தொகுப்பு என்று அறிவிப்பதற்காகவே ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

பாஜக தனது தேர்தல் பிரச்சாரத்தின்போதே அரசியலமைப்பு சட்டத்தை மாற்றுவோம் என்று சூளுரைத்தே வெற்றி பெற்றிருக்கிறது. சுதந்திரம் பெற்றது முதலே தொடர்ந்து வரும் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது பிரிவை ரத்து செய்வோம் என்று சொல்லியே ஆட்சிக்கு வந்தது. அதோடு காஷ்மீர் நிரந்தர குடிமக்கள் பற்றி வரையறுக்கும் 35A என்ற பிரிவையும் ரத்து செய்யப் போவதாக பேசி வருகின்றனர். சில மாதங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர் ஆனந்த் குமார் ஹெக்டே நாங்கள் அரசியல் சட்டத்தை மாற்றவே வந்திருக்கிறோம் என்று கூறினார். அரசியல் சாசனத்தின் முன்னுரையில் இருக்கும் Secularist, Socialist என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும் என்று பேசியுள்ளார். பல முக்கியமான சட்ட மசோதாக்களை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதல் பெறாமல் குறுக்கு வழியில் நிறைவேற்றியிருக்கின்றனர். நில அபகரிப்பு சட்டத்தை ராஜ்யசபாவில் நிறைவேற்ற போதிய பலம் இல்லாததால் ராஜ்யசபா ஒப்புதல் தேவைப்படாத Money Bill ஆக மாற்றி நிறைவேற்றியிருக்கின்றனர். பல்வேறு முக்கியமான துறைகளின் நியமனங்களையும் அரசியலமைப்பு சட்டம் சொல்லாத குறுக்கு வழியில் தங்களது சொல்படி ஆடும் பாசிச எண்ணம் கொண்டவர்களை வைத்து நடத்தியுள்ளனர்.

மத்திய அரசு அரசியல் சட்டத்தை எந்தளவிற்கு மதிக்கிறது என்பதற்கு பணமதிப்பழிப்பு ஒரு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டு. நாட்டில் புழக்கத்தில் இருந்த பாதிக்கும் மேற்பட்ட பணத்தை செல்லாது என்று அறிவிப்பதற்கு முன்பு நாடாளுமன்றத்தில் அறிவிக்கவோ, விவாதிக்கவோ இல்லை. ஏன் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களிடம் கூட கலந்தாலோசிக்கவில்லை. பிரதமர் தனது தூக்கத்தில் தோன்றிய கனவை அரசியல் சட்டத்தை, நாடாளுமன்றத்தை, மக்கள் பிரதிநிதிகளை மருந்துக்குக்கூட மதிக்காமல் சர்வாதிகாரத்தனமாக நனவாக்க முயன்றுள்ளார். அவசரக்கோலத்தில் அவர் செய்த அந்த குற்றத்திற்கு நாட்டின் குடிமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் மரணதண்டனை அனுபவித்தும் இன்றுவரை அதற்காக சிறு வருத்தம் கூட தெரிவிக்காமல் ஆட்சி செய்து வருகிறார்.

அரசியல் சாசனம் அனைத்து தரப்பு மக்களுக்குமான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துகிறது. ஆனால் தற்போதைய மத்திய அரசு சிறுபான்மை முஸ்லிம்களுக்கு இந்த தேசத்தில் எந்தவிதமான உரிமைகளும், அதிகாரமும் இல்லை என்பதை தனது கொள்கை முடிவாகவே வைத்திருக்கிறது. உத்திரபிரதேசத்தில் ஆளும் பாஜக சார்பாக ஒரு எம்எல்ஏ கூட சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தில் இருந்து இல்லை. நாட்டிலும், நாட்டின் மிகப்பெரிய மாநிலத்திலும் ஐந்தில் ஒரு பங்கு வாழும் ஒரு சமுதாயக் கூட்டத்தில் இருந்து ஆளும் அரசில் ஒரே ஒரு மக்கள் பிரதிநிதி கூட இல்லாததன் மூலம் பாஜக சொல்ல வரும் செய்தி ஒன்றே ஒன்று. எங்கள் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எவ்வித உரிமைகள், அதிகாரம், பங்களிப்பும் இருக்காது. நாங்கள் ஆட்சியில் தொடர்ந்தால் இந்த நாட்டிலேயே அவர்களுக்கு இடம் கிடையாது என்பதுதான் அது. இந்த செய்தியைத் தான் அவர்களது பிரதிநிதிகள் ஊர் ஊராக, கூட்டம் கூட்டமாக சொல்லி வருகிறார்கள். ராமரை ஏற்காதவர்கள் இந்தியர்கள் இல்லை, சூரியனை வணங்காதவர்கள், யோகாவை எதிர்ப்பவர்கள்பாகிஸ்தான் செல்லுங்கள், அரசை விமர்சிப்பவர்கள் தேச விரோதிகள்,

முஸ்லிம் பெண்களின் பிணங்களைத் தோண்டியெடுத்து கற்பழியுங்கள், மாட்டிறைச்சி வைத்திருந்தால், மாடு வளர்த்தால் மரண தண்டனை இவையெல்லாம் முஸ்லிம்களுக்கு இந்தியாவில் கிடைக்கும் வெகுமானங்கள்.

முறையாக தேர்தல் நடத்தி, முடிவில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆட்சியமைக்கும் உரிமை என்பது அரசியல் சாசன வழிமுறை. ஆனால் ஜார்கண்ட்டிலும், சத்தீஸ்கரிலும் ஆட்சியில் இருப்பவர்களை அரசியல் அமைப்பிற்கு புறம்பாக, தங்களால் நியமிக்கப்பட்ட பொம்மை ஆளுநர்கள் மூலம் அகற்றிவிட்டு அங்கு தங்கள் ஆட்சியை நிறுவியது பாஜக. மணிப்பூர், கோவா, அசாம் போன்ற மாநிலங்களில் பெரும்பான்மை பெற்ற கட்சி ஆட்சியமைக்க அழைக்கப்படாமல் பெரும்பான்மைக்கு அருகாமையில் கூட இல்லாத பாஜக ஆட்சியமைத்தது. இது தான் இந்த ஆட்சியில் அரசியலமைப்புச் சட்டத்திற்கும், தேர்தலுக்கும், மக்கள் தீர்ப்புக்கும், ஜனநாயகத்திற்கும் வழங்கப்படும் மரியாதை.

இந்தியா பல இன, மொழிக்குழுக்கள் தங்களுக்கான நிலப்பகுதிகளில் தாங்கள் விரும்பிய ஆட்சியை அமைத்து வாழும் பல மாநிலங்களின் கூட்டால் அமையப்பெற்றுள்ளது. இந்திய ஒன்றியம் என்று அரசியல் சாசனம் அதனை வரையறுத்துள்ளது. மத்தியில் இருக்கும் ஒன்றிய அரசுக்கு சில அதிகாரங்களும், மாநில அரசுகளுக்கு அதிகபட்ச அதிகாரங்களும் கொண்டே இந்தியாவின் மத்திய-மாநில ஆட்சி முறைமை அமைந்துள்ளது. இதனைத்தான் மத்தியில் கூட்டாட்சி-மாநிலத்தில் சுயாட்சி என்று நாம் முழங்குகின்றோம். ஆனால் இன்றைய மத்திய அரசு, மாநில அரசுகளின் உரிமைகளைத் தட்டிப் பறிப்பதிலும், அரசியல் சட்டத்திற்கு புறம்பாக ஆளுநர்கள் மூலம் மாநில அரசுகளை ஆட்டுவிக்கும் வேலையையும் வெட்கமின்றி செய்து வருகின்றது. தமிழகத்திலும், புதுச்சேரி, டில்லி போன்ற இடங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் இருக்கும்போது அவர்களை செயல்பட விடாமல் தடுப்பதும்,

அவர்களின் அனுமதியின்றி ஆளுநர் அரசின் செயல்பாட்டில் தலையிடுவதும் அருவருப்பான அரசியலாக அரங்கேறி வருகிறது. உச்சபட்சமாக கோவாவில் யாரை அரசமைக்க அழைப்பது என்பது குறித்து நிதியமைச்சர் அருண் ஜேட்லியிடம் விவாதித்ததாக அம்மாநில ஆளுநர் தெரிவித்தது இந்த அரசில் யாருக்கு என்ன வேலை என்ற வரைமுறை இருக்கிறதா, பின்பற்றப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. முன்பே சொன்னது போல பல மாநிலங்களில் போதிய பலம் இல்லாத பாஜக ஆளுநர்கள் மூலம் ஆட்சியையும் பிடித்துள்ளது, ஆளுநர்களை வைத்து அரசியல் சாசன வழிமுறைகள் எப்படி அப்பட்டமாக மீறப்படுகிறது என்பதை எடுத்தியம்புகிறது.

இந்திய அரசியலமைப்பு குடிமக்கள் அனைவருக்கும் அவர்கள் விரும்பியதை பேசக்கூடிய, எழுதக்கூடிய, வெளிப்படுத்தக்கூடிய கருத்து சுதந்திரத்தை வலியுறுத்து கிறது. ஆட்சியாளர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறுகள் செய்யும்போது அவற்றை விமர்சிக்க தார்மீக உரிமை அவர்களை ஓட்டளித்து தேர்ந்தெடுத்தவர்களுக்கு அரசியலமைப்பு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஐந்து வருடங்களில் அரசையும், ஆளும்கட்சியின் சித்தாந்தத்தையும் விமர்சிப்பவர்களின் குரல்வளைகள் நெறிக்கப்பட்டு வந்துள்ளன. மத்திய அரசை பின்புலமாக இருந்து இயக்கி வரும் ஆர்எஸ்எஸ், இந்துந்துவ, சங்பரிவார இயக்கங்களை எதிர்த்து எழுதியதற்காகவும், பேசியதற் காகவும் நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் என்று பல சிந்தனைவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்த கொலைகளில் ஈடுபட்ட வர்கள் யாரெனத் தெரிந்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் காலம் தாழ்த்திவருகின்றனர். ஏனென்றால் அவர்கள் ஆளும் பாஜகவின் சித்தாந்தத்தை பின்பற்று பவர்கள். இந்த ஒரே காரணத்திற்காக குற்றவாளிகள் அரசியல் சட்டத்திற்கு புறம்பாக சுதந்திரமாக உலவ விடப்பட்டுள்ளனர். சமீபத்தில் ஆதிவாசி, பழங்குடி மக்களுக்காகவும், தொழிலாளிகளுக்காகவும் குரல் கொடுத்து

வந்த சுதா பரத்வாஜ், கௌதம் நாவல்கா, வெர்னான் கான்சால்வ்ஸ், வரவரராவ், அருண் ஃபெரேரா போன்ற சமூக போராளிகளையும், மனித உரிமை ஆர்வலர்களையும் வீட்டுக் காவலில் வைத்து பிறகு ஜாமின் கூட தராமல் சிறையில் அடைத்துள்ளது மத்திய அரசு. தமிழகத்திலும் திருமுருகன் காந்தி, வளர்மதி, பேராசிரியர் ஜெயராமன், தோழர் முகிலன் போன்றவர்கள் மீது பல முறை குண்டர் சட்டங்கள் போடப்பட்டு, அவை நீதிமன்றங்களால் உடைக்கப்பட்டுள்ளன. இந்த அரசிற்கும், அரசை பின்னிருந்து இயக்கும் சித்தாந்தத்திற்கு எதிராகவும் பேசும் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரணம் அல்லது சிறைக் கொட்டடிதான் பரிசளிக்கபடுகிறது.

ஒட்டுமொத்த இந்திய குடிமக்களும் நீதிக்காக நம்பியிருப்பது நீதிமன்றத்தை. நீதிமன்றங்களில் அதிகாரம் மிக்கதாக அரசியலமைப்பு சட்டத்தால் வரையறுக்கப் பட்டுள்ளது உச்சநீதிமன்றம். அந்த உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கும் இடத்தில் இருக்கும் நீதிபதிகள் தங்களால் சுதந்திரமாக செயல்படமுடியவில்லை என்று வரலாற்றிலேயே முதல்முறையாக போர்க்கொடி தூக்கினார்கள். வழக்கை ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது, முக்கியமான வழக்குகளை விசாரிப்பதில் தலைமை நீதிபதி தன்னிச்சையாக செயல் படுகிறார் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மீது புகார்ப்பட்டியல் வாசித்தனர். உச்சநீதிமன்ற நீதிபதிகள் செல்லமேஸ்வர், குரியன் ஜோசப், ரஞ்சன் கோகாய், லோகூர் ஆகிய நீதிபதிகள் ஜனவரி மாதம் பத்திரிகையாளர்களை சந்தித்து உச்சநீதிமன்றம் தனது கண்ணியத்திற்கு ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவதாகவும், அதனால் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் வெளிப்படையாக அறிவித்தனர். நீதித்துறையில் தீர்ப்பு வழங்கும் இடத்தில் இருப்பவர்கள் பல நேரங்களில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்புகளை வழங்கி அரசியலமைப்பு சட்டத்தையே கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். குஜராத் போலி

என்கவுண்டர் வழக்கில் பாஜக தேசிய தலைவர் அமித்ஷாவை விடுதலை செய்து அதற்கு பகரமாக கேரள ஆளுநராக பதவி பெற்றார் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சதாசிவம். சிறுபான்மை மக்களுக்கு அவர்களது உடை உரிமையை அடிப்படை உரிமையாக அரசியலமைப்பு சட்டம் உறுதி செய்துள்ள நிலையில் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவிகள் தலையை மறைக்கும் ஸ்கார்ஃப் அணியக் கூடாது என்று தலைமை நீதிபதி தத்து, தீர்ப்பு வழங்கி அரசியலமைப்பு சட்டத்தை அசிங்கப்படுத்திய நிகழ்வும் இந்த ஆட்சியில்தான் அரங்கேறியது. உச்சபட்சமாக ஒரு முக்கியமான வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கும் இடத்தில் இருந்த நீதிபதி லோதா மர்மமான முறையில் மரணமடைந்த விவகாரத்தில் அவசர அவசரமாக தலைமை நீதிபதி தீபக் மிஸ்ராவே தலையிட்டு அது இயற்கை மரணம் என்று தீர்ப்பெழுதியது நாட்டையே உலுக்கியது.

அரசியலமைப்பு சாசனம் மக்களுக்கு வழங்கும் உரிமைகள் மறுக்கப்படும்போது அவற்றில் தலையிட்டு அந்த உரிமைகளை மீட்டுத்தரும் உயரிய இடத்தில் இருப்பவை நீதிமன்றங்கள். நீதிமன்றங்களால் வழங்கப்படும் தீர்ப்புகளை ஆட்சியாளர், பொதுமக்கள் பேதமின்றி அனைவரும் மதிக்க வேண்டும். மறுத்தால் அது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதப்பட்டு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இந்த ஆட்சியில் நீதிமன்ற தீர்ப்புகள் பல நேரங்களில் மருந்துக்கும் கூட மதிக்கப்படுவதில்லை. ஆதார் அட்டையை கட்டாயமாக்கும் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தபோதே மத்திய அரசு அவசர அவசரமாக பிறப்பு முதல் இறப்பு வரை ஆதார் அட்டையை கட்டாயம் என்று நடைமுறைப்படுத்தியது. இடையில் பல சமயங்களில் மத்திய அரசை உச்ச நீதிமன்றம் கண்டித்தும்கூட ஆதாரை கட்டாயமாக்குவதில் அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது. இறுதியில் நலத் திட்டங்களுக்கு ஆதார் கட்டாயமில்லை

என்று இறுதித் தீர்ப்பு வந்தபோது அநேகமாக அனைத்து துறைகளிலும், பெரும்பான்மையான மக்கள் ஆதாரை இணைத்து விட்டிருந்தனர். பல நாட்கள் கூடி, பல மணி நேரங்கள் விவாதம் நடத்தி வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒன்றுக்கும் உதவாததாக மத்திய அரசாலேயே மாற்றப்பட்டது. காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு மூன்று வார காலம் அவகாசம் வழங்கப்பட்டது. இரண்டு வாரங்கள் தாமதித்து கடைசி நேரத்தில் நீதிமன்றத்தை நாடி தீர்ப்பில் இருப்பது சரியாக புரியவில்லை என்று கூச்சமே இல்லாமல் வாதாடி கர்நாடக தேர்தலை மனதில் வைத்து வாரியம் அமைப்பதை தாமதப்படுத்தியது மத்திய அரசு. இதுபோல பல நேரங்களில் நீதிமன்ற தீர்ப்புகளை முதுகுக்கு பின்னால் தூக்கியெறிந்து தனது அரசியல் சாசன விசுவாசத்தை நிரூபித்தது மத்திய பாஜக அரசு.

இந்தியாவில் சிபிஐ, வருமான வரித்துறை, தேர்தல் ஆணையம், நீதித்துறை போன்ற அரசு நிறுவனங்கள் மத்திய அரசால் நிர்வகிக்கப்பட்டாலும் அவை தன்னாட்சி அந்தஸ்து பெற்று இயங்கக்கூடிய வகையில் அரசியலமைப்பு சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடந்த நான்கு வருடங்களில் இந்த தன்னாட்சி அமைப்புகளை தனது இஷ்டத்திற்கு இயக்கும் இழிவான வேலையை மத்திய அரசும், அதனை ஆள்பவர்களும் செய்து வருகின்றனர். தங்களது அரசியல் எதிரிகள், தங்கள் வழிக்கு வராதவர்கள் மீது வருமான வரித்துறை சோதனை எனும் ஆயுதத்தை பிரயோகப்படுத்தி தங்கள் அடிமைகளாக மாற்றும் முயற்சியை இந்த அரசு கூச்சமின்றி மேற்கொண்டது. தமிழகத்தில் அதிமுகவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் மீதும், கர்நாடகத்தில் குஜராத் காங்கிரஸ் எம்எல்ஏக்களை பாதுகாத்த அமைச்சர் டிகே சிவகுமார், அவரது சகோதரர் மீதும், மேற்கு வங்காளத்திலும், இன்னும் பல்வேறு நபர்கள் மீதும் வருமான வரித்துறையை ஏவி அராஜகம் செய்தது. வருமான வரித்துறையை போலவே சிபிஐ அமைப்பையும்

தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சி எடுத்தது பாஜக அரசு. ரபேல் ஊழல் பற்றி விசாரிக்க துணிந்த சிபிஐ இயக்குனர் அலோக் வர்மாவை அந்த பதவியில் இருந்து நீக்கி தனது கைப்பாவையாக ஒருவரை நியமித்தது. அதனை எதிர்த்து நீதிமன்றத்திற்கு சென்று போராடி மத்திய அரசின் முடிவு அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய ஒரு நாளுக்குள்ளாகவே மீண்டும் அலோக் வர்மாவை நீக்கி நீதிமன்ற தீர்ப்பையும், அரசியல் அமைப்பையும் அசிங்கப்படுத்தினார் பிரதமர் மோடி.

இன்னும் பல்வேறு துறைகளிலும் அரசியல் அமைப்பு சாசனத்தை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளை மத்திய அரசு மூர்க்கமாக செயல்படுத்தியது. இன்னும் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றையே இங்கே பட்டியலிட்டுள்ளேன். ஒன்று மட்டும் உறுதியாக சொல்ல முடியும். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தால் அரசியல் சாசனத்தையே முழுமையாக நீக்கிவிட்டு சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்தவும் தயங்கமாட்டார்கள். அதில் இருந்து தேசத்தை காப்பாற்ற வேண்டிய கடமை ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இருக்கிறது.

★ ★ ★



# 4

# பெண்கள் பாதுகாப்பும் பாஜகவும்

**மீ**ண்டும் மீண்டும் இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பு விவாதத்திற்குள்ளாக்கப்படுகிறது. பல தசாப்தங்களாய் நீடிக்கும் நிதர்சனம் தான் என்றாலும் சமூக ஊடகங்களின் அசுரப் பாய்ச்சலால் சமீப காலங்களில் பெண்கள் வன்கொடுமை, பணியிட தொந்தரவுகள், குழந்தைகள் சித்ரவதை போன்றவை பற்றிய செய்திகள் அதிகம் விவாதிக்கப்படுகின்றன. எதிர்ப்பு பிரச்சாரங்கள், விழிப்புணர்வு இயக்கங்கள் போன்றவை மூலமும் பாதிக்கப்பட்டவர்கள் தைரியமாக தங்கள் வேதனைகளை உலகிற்கு தெரியப்படுத்துவதாலும் பெண் பாதுகாப்பு பற்றி தேசம் பேசுகின்றது.

உலகளவில் பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுதியில்லாத நாடுகளில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளதாக சில மாதங்களுக்கு முன்பு ஊடகங்களில் செய்திகள் வந்தன. அப்படிலாம் கிடையாது, என் தேசம் பெண்களுக்கு பாதுகாப்பானது என்று மார்தட்டி சொல்லலாம் என்று உதடுகள் துடிக்கிறது. ஆனால் உண்மை நிலவரம் தடுக்கிறது. பொதுவாக இந்த ஆய்வுகள், கருத்துக்கணிப்புகளின் மீது அவ்வளவாக ஈர்ப்பு ஏற்படுவதில்லை. ஏனென்றால் அவை நூறில் ஒரு மடங்கிற்கும் கீழான எண்ணிக்கையிலான நபர்களிடம் இருந்து தருவிக்கப்படும் முடிவுகள். ஒருபோதும்

அவை ஒட்டுமொத்த மக்களின் கருத்தாக ஆகமுடியாது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதெல்லாம் சோற்றுக்கு மட்டுமே உதவ முடியும். ஒரு நாட்டின் தரத்தை நிர்ணயிக்க உதவமாட்டா. அப்படி கருத்துக்கணிப்புகளை எல்லாம் ஏற்றுக்கொள்வதென்றால் சமீபத்தில் இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் மோடி மீண்டும் பிரதமராவதை விரும்புவதாக ஒரு பத்திரிகை வெளியிட்ட ஆய்வு முடிவையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.அந்த அடிப்படையில் பெண்களுக்கு பாதுகாப்பின்மையில் இந்தியா முதலிடம் என்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. அது ஒரு குறுகிய பார்வை. ஆனால் இந்தியாவில் பிறந்த குழந்தை முதல் பல் போன பாட்டி வரை பாதுகாப்பு மிகவும் மோசமாக இருக்கிறது என்பதே நிதர்சனம். அதனை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

பெண் சிசுக்கொலை, பெண் குழந்தைகள் கடத்தல், விபசாரத்தில் ஈடுபடுத்துவதற்காக கடத்தப்படும் பெண்கள், பள்ளிகளில், கல்லூரிகளில், பணியிடங்களில் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படும் பெண்கள், திரைகளில் போகப்பொருளாக காட்டப்படும் பெண்கள், கணவன், பெற்றோரால் வன்முறை எதிர்கொள்பவர்கள் என்று பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இந்தியாவில் மலிந்து காணப்படுகிறது. கடந்த காலங்களில் இருந்து கடந்த வாரம் வரை இதற்கான ஆதாரங்கள் இருந்துகொண்டேதான் இருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்பு புதுடில்லியில் ஓடும் பேருந்தில் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிர்பயா மூலம் பெண்கள் பாதுகாப்பு அதிகம் விவாதத்திற்குள்ளானது. ஆனாலும் கூட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துதான் வந்துள்ளதே ஒழிய குறையவில்லை.

இதற்கு முன்பும் பெண்கள் பாதுகாப்பு பற்றிய இந்தியாவின் நிலை மோசம்தான் என்றாலும் கூட இப்போது அதனைப் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. இன்று

இந்தியாவை ஆளும் உயரிய பொறுப்பில் இருக்கும் கட்சியினர் அதிகமாக பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவோ அல்லது அந்த குற்றவாளிகளை பாதுகாப்பவர்களாகவோ இருப்பதுதான் அதற்கான காரணம் என்றால் அதை யாரும் மறுக்கமுடியாது.

நண்பர் ஒருவரது பதிவில் ஒருவர் கேட்டிருந்தார், ஏன் எதற்கெடுத்தாலும் மோடியை குறை சொல்கிறீர்கள், பெண்கள் பாதுகாப்புக்கு பாஜகவோ, மோடியோ என்ன செய்ய முடியும் என்று. இதற்கு முன்பு எத்தனையோ சம்பவங்கள் நடந்துள்ளன, அப்போதெல்லாம் பாஜகவையோ, மோடியையோ காரணப்படுத்தவில்லையே. பெங்களூரில் ஒரு பெண் நள்ளிரவில் மானபங்கப்படுத்தப் பட்டாரே அப்போது யாரும் மோடியை நோக்கி கையை நீட்டவில்லை, நிர்பயா சம்பவத்திற்கு பாஜகவை குறை கூறவில்லை, கேரளாவில் தலித் பெண் கொடூரமாக கொல்லப்பட்ட போது இன்னும் பல்வேறு சம்பவங்களில் மோடியையோ, பாஜகவையோ யாரும் விமர்சிக்கவில்லை. ஆனால் இப்போது ஏன் மோடியையும், பாஜகவையும் குற்றம் சொல்கிறார்கள் என்றால் பெண்களுக்கு எதிரான குற்றங்களை முன்னெடுப்பவர்களாக, அதனை நியாயப் படுத்துபவர்களாக, குற்றவாளிகளை காப்பாற்ற முயல்பவர் களாக அவர்கள் இருப்பதால்தானே.

பிரதமர் மோடி ஒரு பெண்ணை உளவு பார்க்க சொன்ன சம்பவம் தேசத்தின் நிகழ்பதிவுகளில் இடம்பெற்றது அனைவருக்கும் நினைவிருக்கலாம். சமீபத்தில் உத்திரபிரதேசத்தில் ஒரு பாஜக எம்எல்ஏ ஒரு பதின்ம வயது பெண்ணை தனது சகாக்களுடன் கூட்டு வன்புணர்வு செய்ததும், அந்த பெண்ணின் தந்தை காவல் நிலையத்தில் இறந்து போனதும் மறக்க முடியாது.

ஜம்முவின் கத்துவா பகுதியைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி ஆசிஃபா கொடூரமான முறையில் கொல்லப்பட்ட சம்பவத்தின் குற்றவாளிகளை காப்பாற்ற அம்மாநில பாஜக அமைச்சர் முயற்சி செய்ததும், நீதிமன்றத்தில் வழக்கை

விசாரிக்க விடாமல் பாஜக வழக்கறிஞர்கள் தடை ஏற்படுத்தியதும் அவ்வளவு எளிதில் நம் நினைவை விட்டு அகன்று விடுமா? ஒரு மாவட்ட ஆட்சியரின் மகளை பாஜக அமைச்சரின் மகன் துரத்திச் சென்று அச்சமூட்டிய சம்பவமும் இந்தியாவில்தானே நடந்தது.

பாஜகவினரால் பிற பெண்களுக்குத்தான் ஆபத்து என்றால் இப்போது தங்கள் கட்சியைச் சார்ந்த பெண்களையும் கூட அவர்கள் விடுவதாயில்லை. அதிலும் மத்தியில் ஆளும் ஒரு பெண் அமைச்சருக்கே பாதுகாப்பில்லாத ஒரு சூழல் சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்டதை நினைத்தால் இந்த ஆய்வு முடிவு உண்மை தான் என்று சொல்லத் தோன்றுவதை தடுக்க முடியவில்லை. சில மாதங்களுக்கு முன்பு, முஸ்லிம் ஆணைத் திருமணம் செய்த ஒரு பெண்ணிற்கு பாஸ்போர்ட் தரமுடியாது என்று ஒரு அதிகாரி சொல்ல, அந்த பெண்ணின் கணவன் சமூக வலைத்தளங்களில் நாறடிக்க, பதறிப்போன அமைச்சர் சுஸ்மா சுவராஜ் நேரடியாக தலையிட்டு அந்த தம்பதிக்கு பாஸ்போர்ட் கிடைக்கச் செய்தார். இந்த சம்பவம் சுஸ்மா கட்சியினரின் இணையப் படைக்கு அல்சர் பிரச்னையைவிட அதிகமான எரிச்சலை ஏற்படுத்தவே தங்கள் அமைச்சர் என்றும் வித்தியாசம் இல்லாமல் தங்கள் கடமையை செய்ய ஆரம்பித்துவிட்டனர். மாட்டியது பெண் அல்லவா? காவிகளிடத்தில் கண்ணியமோ, பெண்ணியமோ எதிர்பார்க்க முடியுமா.? சுஸ்மா சுவராஜை கேவலமாக விமர்சித்து அவரை கொலை செய்ய வேண்டும், அவர் முஸ்லிம் கிட்னியை வைத்திருப்பதால் இப்படி முஸ்லிம்களுக்கு சாதகமாக நடந்து கொள்கிறார், இருக்கும் ஒரு கிட்னியும் சீக்கிரம் நின்றுவிடும் என்றெல்லாம் எழுத ஆரம்பித்துவிட்டனர்.

இப்படி எழுதுபவர்களை பாஜக எம்பிக்களும், ஏன் பிரதமர் மோடியே கூட ட்விட்டரில் ஃபாலோ செய்கிறார் என்றால் அவர்கள் கட்சியில் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சுஸ்மாவே தன்னை விமர்சித்து வந்துள்ள ட்வீட்களை

ரீட்வீட் செய்து தனக்கு நேர்ந்துள்ள அநியாயத்தை வெளிப்படுத்தியுள்ளார். இத்தனைக்கும் பிறகும் கூட எந்த பாஜக அமைச்சரோ, எம்பியோ சுஸ்மாவை ஆதரித்தோ அந்த ட்விட்டர்வாசிகளை கண்டித்தோ ஒரு சிறு வார்த்தைகூட எழுதவில்லை. காங்கிரஸ் மட்டும் கண்டித்து அறிக்கை விட்டது.

தன் கட்சியினரால் தனக்கு ஆபத்து என்று மத்திய பிரதேச பாஜக பெண் எம்எல்ஏ சட்டசபையில் கண்ணீர் விட்டு அழுத சம்பவமும் நாட்டை ஆளும் கட்சியில் பெண்களின் நிலையை கட்டியம் கூறுகின்றது. அனைத்திற்கும் முந்திக் கொண்டு கருத்து சொல்லும் பிரதமர் மோடி தனது கட்சியினரின் இந்த கேவலமான நடத்தைகள் குறித்து வாயே திறக்கவில்லையே.

கட்சியின் அடிமட்டத்தில் இருப்பவர்கள்தான் இப்படி தரக்குறைவாக நடந்து கொள்கிறார்கள் போல என்று நினைத்தால் இப்போது புது பூகம்பங்கள் கிளம்பியுள்ளன. தேசத்தையே உலுக்கி வரும் #MeToo பிரச்சாரத்திலும் கூட பாஜகவினர் சாதனைகள் இடம்பெறத் தவறவில்லை. அதுவும் மத்தியில் அமைச்சராக பொறுப்பு வகிக்கும் ஒருவரது பெயரே இப்போது சந்திக்கு இழுத்து வரப்பட்டுள்ளது. அதுவும் ஒரே நேரத்தில் ஆறு பெண் பத்திரிகையாளர்கள் மத்திய அமைச்சர் M.J. அக்பர் மீது பத்திரிகையாளராக இருந்தபோது தங்களிடம் அத்துமீறி நடந்துகொள்ள முயன்றதாக குற்றம் சுமத்தியுள்ளனர். அவர் அதற்காக பதவியும் விலகியுள்ளார்.

முன்னாள் பாஜககாரரும், ஆர்எஸ்எஸ் உறுப்பினருமான பன்வாரிலால் புரோகித். யாரென்று நான் சொல்லத் தேவையில்லை. தமிழக ஆளுநராக பொறுப்பேற்றதில் இருந்தே பேசுபொருளாக இருந்துவரும் அவரது பெண்கள் பலவீனம் நாற்றம் வீசும்பொருளாக மாறிவிட்டுள்ளது. ஆளுநர் அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ஒரு பெண் நிருபர் கன்னத்தில் தட்டிக் கொடுத்து பிறகு அவர் வீதிக்கு இழுத்ததும் தாத்தா மாதிரி என்று சமாளித்ததும்

தமிழகம் அறிந்தது. அருப்புக்கோட்டையில் ஒரு கல்வி நிலையத்தை கலவி நிலையமாக மாற்ற முயன்ற நிர்மலாதேவி என்ற இழிபிறவி தனக்கு ஆளுநர் மாளிகை வரை செல்வாக்கு இருக்கிறது என்று தைரியமாக சொன்னது, ஊருக்கு முந்திக்கொண்டு விசாரணை ஆணையம் அமைத்தது, அதற்காக நக்கீரன் கோபாலை கைது செய்து நீதிமன்றத்திடம் செருப்படி வாங்கியது என்று தமிழக ஆளுநரின் பெண்கள் பலவீனம் இப்போது தமிழகத்தின் சூடான விவாதப்பொருளாக இருக்கிறது.

இப்படி ஒரு பெண் மத்திய அமைச்சர் முதல் வயிற்றில் இருக்கும் சிசு வரை பெண்களுக்கு பாதுகாப்பில்லாத ஒரு தேசம் பெண்களுக்கு பாதுகாப்பின்மை பட்டியலில் முதலிடம் பிடிக்கவில்லை என்றால்தானே ஆச்சரியப்பட வேண்டும். ஆட்சியின் தலைவர் முதல் எம்பி, அமைச்சர், எம்எல்ஏ ஆளுநர் என்று அடிமட்ட தொண்டன் வரை பெண்களை இச்சைதணிக்கும் இயந்திரமாக பார்க்கும் தேசம் பெண்கள் வாழ பாதுகாப்பான நாடாக எப்படி இருக்க முடியும்.?

★ ★ ★



# 5 மரணத்தால் மரத்துப் போகும் மனங்கள்

மரணத்தால் மரத்து போகும் மனங்கள்!

மீண்டும் ஒரு மலர் வாசனையை வெளிப்படுத்தும் முன்பே உதிர்ந்துவிட்டது.

மகள் மருத்துவராக வந்து தங்கள் ஏழ்மை பிணி தீர்ப்பாள் என்று வாஞ்சையுடன் இருந்த பெற்றோர்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராப் பிணி தொற்றிக் கொண்டுள்ளது.

அன்று தேர்வு முடிந்து வந்து அப்பா எங்கே என்று கேட்டான் ஒரு மகன். இன்று தேர்வு முடிவு வந்ததும் என் மகள் எங்கே என்று கேட்கின்றனர் ஒரு தாய்,தந்தை.

அனிதா, கிருஷ்ணசாமி, இப்போது பிரதீபா. மனுவின் நீதிக்காக பலியிடப்பட்ட கன்றுகள். ஆனால் எத்தனை முறை மணியை அடித்தாலும் நீதி மட்டும் கிடைப்பதில்லை.

அன்று பசுவின் கதறலைக் கேட்டு மகனையே பலியிட்டதாக சொல்கிறது புராணம். ஆனால் இங்கு மீண்டும் மீண்டும் கன்றுகளே பலியிடப்படுகின்றன.

எம் பிள்ளைகளின் ஆடை, ஆபகரணங்களை அவிழ்த்துப் மானத்தை அழித்தார்கள்.

தமிழனா, நீதான் மானம் இழந்து உயிர் வாழ மாட்டாயே என்று இப்போது உயிர்களையும் பறித்துவிட்டு எட்டி நின்று சிரிக்கிறார்கள்.

ஒவ்வொரு மரண செய்தி வரும்போதும் மாணவ அமைப்புகள்போராடுவார்கள், அரசால் ஒடுக்கப்படுவார்கள்..

அரசியல் கட்சிகள் அடையாளப் போராட்டம் நடத்து வார்கள்..

சமூக வலைதளங்களில் ஆற்றாமை பதிவுகள் பகிரப்படும்..

பிறகு இன்னொரு மரணம் வரும் வரை

மயானத்தை போலவே அமைதி ஆகிவிடுகிறது..

(ம)ரணங்களை பொறுத்துப் போகவும்

பிணங்களை பொறுக்கிப் போகவும் நாம் பழகி விட்டோம்..

மரணங்களால் நம் மனங்கள் மரத்துப் போய்விட்டது..

★ ★ ★



# 6

# நஜீப் எங்கே..
# ஒரு தாயின் கதறல் காதில் கேட்கவில்லையா?

அலுவலக வேலையாக நான் வெளிநாட்டில் ஒரு வருடம் இருந்தேன். திரும்பி வருகையில் விமான நிலைய வாசலில் என் தாய் என்னை ஓடி வந்து கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டு வரவேற்றார்கள். வேலைக்காகச் சென்றிருந்தேன் என்றாலும் என்னை விட்டு நீண்ட காலம் பிரிந்திருந்த என் தாயின் மனநிலையை என்னால் உணர முடிந்தது.

இன்று உச்ச நீதிமன்ற வளாகத்தில் என் தாயின் வயதை ஒத்த ஒரு தாய் தன்னந்தனியாக அலைந்து கொண்டிருக்கின்றார். அந்தத் தாய்க்கும் 'நஜீப் அஹமது' என்ற பெயரில் என்னைப் போன்ற ஒரு மகன் இருந்திருக்கின்றார். அவருடைய அந்தத் தாயை விட்டு அவர் பிரிந்து இன்றோடு இரண்டு வருடங்கள் ஆகின்றது. ஆனால் அந்தத் தாய்க்குத் தன் மகன் எங்குச் சென்றார் என்பது தெரியாது. உயிரோடு இருக்கின்றாரா, மரணித்து மண்ணோடு மண்ணாகிவிட்டாரா? தெரியாது. பத்து மாதங்கள் சுமந்து வலி தாங்கிப் பெற்றெடுத்து, இரத்தத்தைப் பாலாக்கி, தான் உண்ணாமல் அவனுக்கு ஊட்டி, தான் உறங்காமல் அவனை உறங்கச்செய்து மகிழ்ந்த ஓர் உயிர், இன்று தன் மகனைக் காணாமல் பல்கலைக்கழகத்திற்கும், காவல்நிலையத்திற்கும்,

நீதிமன்றத்திற்கும் ஓடி, மகனைத் தேடி அலையும் ஓர் அவலநிலையினை ஒவ்வொருவரும் தங்கள் கண்களுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்திக் கொள்ள வேண்டு கின்றேன். அந்தத் தாயின் இடத்தில் நம் தாயை வைத்து சிந்தித்துப் பார்க்க கோருகின்றேன்.

ஊடகங்கள் தங்களுக்கு எந்த செய்தியை வெளியிட்டால் வியாபாரம் அதிகரிக்குமோ அந்தச் செய்தியைத்தான் முக்கியத்துவம் வழங்கி வெளியிடுகின்றன. அதிலும் பாதிக்கப்படுவது முஸ்லிம்களாகவோ தலித்களாகவோ இருந்தால்அந்நிகழ்வு குறித்து எழுத எவருடைய பேனாவிலும் மை இருக்காது. எந்தச் செய்தித் தொலைக்காட்சியிலும் ப்ரைம் டைம் விவாதங்களுக்கு ஆட்கள் கிடைக்க மாட்டார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகம் செய்தித் தொலைக்காட்சிகளின் வாகனங்களால் நிரம்பியிருந்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும் கையில் மைக்குடன் பரபரப்பாக நிருபர்கள் எதை எதையோ உளறிக்கொண்டிருந்தனர். மாணவ தலைவர் கன்ஹையா குமார் கைது செய்யப்பட்டதும், விடுதலை செய்யப்பட்டதும் ஆகப்பெரிய வியாபாரத்தையும் டிஆர்பியையும் வடநாட்டு ஊடகங்களுக்கு அளித்தது. ஆனால் அதே ஊ(நா)டகங்கள் இன்று இந்தத் தாயின் முகத்தைக்கூட பதிவு செய்யத் தாயாராக இல்லை.

விடை தெரியா கேள்வி - எங்கே நஜீப்..?

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் உயிர்தொழில்நுட்பப்பிரிவில் ஆராய்ச்சி மாணவரான நஜீப் அஹமத் 2016, அக்டோபர் 14ம் தேதி பல்கலைக்கழகத்தின் மஹி-மந்தவி விடுதியின் 106ம் எண் அறையில் வைத்து ஆர்எஸ்எஸ்ஸின் மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ABVP) குண்டர்களால் கடுமையாக தாக்கப்படுகின்றார். அதற்கு அடுத்த நாளில் இருந்து நஜீப் அஹமதைக் காணவில்லை.

நஜீபின் தாய் ஃபாத்திமா நஃபீஸ் அஹமத், புதுடில்லி காவல்துறையில் தன் மகனைக் காணவில்லை என்று புகார் கொடுத்தார். ஆனால் காவல்துறை அந்தப் புகார் மீது மெத்தனமாக நடந்து கொண்ட நிலையில் புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு போடப்பட்டது. அந்த மனுவின் மீது நீதிபதி, எந்த பாகுபாடும் இன்றி தீவிர விசாரணை நடத்தி விரைவில் நஜீபைக் கண்டுபிடிக்குமாறு புதுடில்லி காவல்துறைக்கு உத்தரவிட்டார். அதற்குப் பிறகு ஏபிவிபியைச் சார்ந்த நான்கு பேரைக் கைது செய்த காவல்துறை, விசாரணை என்ற பெயரில் நஜீபின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து மிரட்டியுள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகமும் நஜீப் காணாமல் போன சம்பவத்தில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பல்கலைக்கழகத்தின் பல்வேறு மாணவ அமைப்புகள் நடத்திய போராட்டங்களை நிர்வாகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லை.

## புறக்கணிப்பிற்கும் ஒடுக்குமுறைக்கும் நடுவில் சிறுபான்மை மக்கள் :

மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த, கடந்த ஐந்து வருட காலமாக நமது நாட்டில் வாழக்கூடிய பலருக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவி வருகின்றது. மத்தியில் பாஜக ஆட்சியில் அமர்ந்ததில் இருந்து திரைமறைவில் வேலை செய்து வந்த நாசகார பாசிச சக்திகள் வெளிப்படையாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. முற்போக்குச் சிந்தனை யாளர்களான தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் போன்றவர்கள் பொது இடங்களில் வைத்து காவி பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்படுகின்றனர். புதுடில்லியில் உள்ள நேரு அருங்காட்சியகம் செயலிழக்கச் செய்யப்படுகின்றது. முக்கியமான துறைகளில் ஆர்எஸ்எஸ் அமைப்பினர் உயர்பதவிகளில் அமர்த்தப்படுகின்றனர். மாட்டரசியல் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. மாட்டுக்கறி வைத்திருந்த காரணத்திற்காக உயிர்ப்பலிகள்

நிகழ்த்தப்படுகின்றன. சிறுபான்மையின, ஒடுக்கப்பட்ட மக்கள் சொந்த நாட்டிலேயே பாதுகாப்பற்றத் தன்மையை உணர்கின்றனர்.

பல்வேறு துறைகளிலும் காவிமயமாக்கப்படுதல் மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கல்வித்துறை அதில் முக்கியமானது. மத்தியப் பல்கலைக்கழகங்களில் பாசிச சிந்தனை உடையவர்கள் உயர்பதவிகளில் அமர்த்தப்பட்டு, அங்கே பயிலும் சிறுபான்மை, பிற்படுத்தப் பட்ட மாணவர்கள், பாஜகவின் மாணவ அமைப்பான ஏபிவிபியால் அச்சுறுத்தப்பட்டு உயிர்ப்பயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வை எல்லா இடங்களிலும் பரப்புவதில் ஆளும் அரசும், அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் விஷமாகக் கக்கி வருகின்றனர். தேசத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்களை தேச துரோகிகள் என்றும், பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்றும் முத்திரை குத்தி மனத்தளவிலும், எதிர்த்துப் பேசுபவர்களை உடலளவிலும் தாக்குவதற்குக் குண்டர் படையினைக் கல்வி வளாகங்களுக்குள் ஊடுருவச் செய்துள்ளனர். கன்ஹையா குமார் மீதான வழக்குகள், உமர் காலித் மீதான வழக்கு, கொலை முயற்சி போன்றவை இதற்கான உதாரணங்கள்.

தங்களது பணிகளுக்குத் தடையாக இருப்பவர்களை அழிப்பதற்கான வேலைகளிலும் பாசிச சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. சில உதாரணங்கள் ;

1. நுழைவுத்தேர்வு எழுத வரும் மாணவிகள் தங்கள் தலைகளை மறைக்கக்கூடாது என்ற உத்தரவு மூலம் முஸ்லிம், கிறிஸ்தவ மாணவிகளின் அடிப்படை உரிமைகளில் தலையிட முயற்சி.

2. சென்னை IITல் செயல்பட்டு வந்த அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தைத் தடை செய்ய முயற்சி.

3. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஒரு சார்பாக நடந்து கொண்டு சிறுபான்மையின, ஒடுக்கப்பட்ட மாணவர்களைச் செயல்பட விடாமல் தடுக்க முயற்சி.

4. ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் ரோஹித் வெமுலா என்ற தலித் மாணவரைத் தற்கொலைக்குத் தூண்டி நிறுவனப்படுகொலை.

5. புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களான கன்ஹையா குமார், காலித், உமர் ஃபாருக் ஆகியோர் மீது தேசதுரோக வழக்குப் பதிந்து அவர்களை முடக்க சதி

இந்தச் செயல்பாடுகளின் உச்சகட்டமாகதான் நஜீப் காணாமல் போன சம்பவத்தினை நாம் பார்க்க வேண்டும். இப்படி எல்லா வழிகளிலும் சிறுபான்மையின, ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கும் வாழ்வுரிமைக்கும் ஊறு விளைவிக்கும் ஆதிக்க சக்திகள் மீது எவ்வித நடவடிக்கையும் இங்கு எடுக்கப்படுவதில்லை. பாதிக்கப் பட்டவர்களுக்கு, சட்டத்தினால்கூட நியாயமும் கிடைக்கப் பெறுவதில்லை.

ஒரு மாணவன் புகழ்பெற்ற ஜேஎன்யூ பல்கலைக் கழகத்தில் இருந்து காணாமல் போயிருக்கிறார்; இரண்டு வருடங்கள் கழிந்தும் அவரைக் கண்டுபிடிக்க சிறு துரும்பைக் கூட காவல்துறை அசைக்கவில்லை. நாட்டின் உயரிய புலனாய்வு அமைப்பு என்று மார்தட்டிக் கொள்ளும் சிபிஐ சில நாள்கள் அரசுப் பணத்தில் தின்றும், கழிந்தும் கழித்து பிறகு ‘‘கண்டுபிடிக்க முடியவில்லை, வழக்கை முடித்து வைக்க வேண்டும்’’ என்று உச்சநீதிமன்றத்திடம் கோரிக்கை வைக்கிறார்கள். நீதிமன்றமும் கொஞ்சமும் வெட்க உணர்ச்சியின்றி முடித்து வைக்க முன் வருகிறது. சட்டத்தின் ஆட்சி நடப்பதாகக் கூறப்படும் நாட்டில் நீதித்துறையோ அந்த மாணவனின் தாய்க்கு அநீதி இழைக்க மும்முரமாகச் செயல்படுகிறது. டெல்லி உயர்நீதிமன்றம் இந்த வழக்கை ஒரு பொருட்டாக மதிக்கவே இல்லை. இப்போது பதியப்

பட்டுள்ள ஆட்கொணர்வு மனுவையும்கூட தள்ளுபடி செய்துள்ளது. இன்னொரு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் ஆவணங்கள் காணாமல் (!) போய்விட்டன. உச்சநீதிமன்றம் வழக்கை முடித்து வைக்க சிபிஐக்கு அனுமதி அளிக்கிறது. தேசத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்துறையினர் இப்படி ஒரு சம்பவம் நடந்ததையே அறியாதது போல கடந்து சென்று கொண்டிருக்கின்றனர். இன்னும் ஒருபடி மேலே போய் ஓர் ஊடகம், ''அந்த மாணவன் இந்தியாவிலிருந்து வெளியேறி ஐஎஸ் இயக்கத்தில் சேர்ந்துவிட்டதாக'' எந்தவித ஆதாரமும் இன்றி செய்தி பரப்புகிறது. (பிறகு காவல்துறையே இதனை மறுத்துவிட்டது).

இப்படி காவல்துறை, சிபிஐ,நீதித்துறை, ஊடகங்கள் என்று மக்களுக்கான எல்லா நம்பிக்கைகளும் மாணவன் நஜீப் அஹமதின் தாய்க்குப் போட்டி போட்டுக் கொண்டு துரோகம் இழைத்திருக்கின்றன. இத்தனைக்கும் அந்த மாணவன் காணாமல் போனதற்குக் காரணமானவர்கள் ஆளும் பாஜகவின் மாணவ அமைப்பான ஏபிவிபியின் குண்டர்கள் என்பதால். அவர்களைக் காப்பாற்றவும், பாதுகாக்கவும் அரசும், அரசு சார்ந்த நிறுவனங்களும் பகீரத முயற்சிகளைச் செய்கின்றார்கள்.

அந்த மாணவனின் தாய், தன் மகனைக் கண்டுபிடிக்க எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறார், ஆனால் காவல்துறையால் தொல்லைகளுக்கும், அடக்குமுறை களுக்கும் உள்ளாகிறார். வழக்கை நடத்தவிடாமல் மிரட்டப்படுகிறார். நடுரோட்டில் தரதரவென்று இழுத்துச் செல்லப்படுகிறார். ஆனாலும் நம்பிக்கை இழக்காமல் மனம் தளராமல் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார்.

நாமும் அன்னை பாத்திமா நஃபீஸ் அவர்களுடன் அவரது போராட்டத்தில் அவருடன் இணைவோம். நஜீப் பற்றிய செய்தியைப் பரப்புவோம். அவரை மீட்டெடுக்க அரசுக்கு அழுத்தம் தரும் செயல்களில் இறங்குவோம். நமது பிரார்த்தனைகளில் மகனை இழந்து தவிக்கும் அந்த அன்னையையும் சேர்த்துக் கொள்வோம்.

*நமக்கு நடைபெறும்வரை வெறும் செய்தி என்று கடந்து போகாமல் இந்த தேசத்தின் குடிமக்கள் அனைவருக்கும் சமமான நீதியும், வாழ்வுரிமையும் கிடைக்கப்பெற நாம் இணைந்து போராடுவோம்.*

*சிறுபான்மையின, பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வோம்..!*

★ ★ ★



# 7

# போய்யிலே பிறந்து போய்யிலே வளர்ந்த பாஜக.!

**பா**ஜகவின் தேர்தல் உத்திகள் பிரமிக்க வைப்பதாக இருக்கிறது. தனது சாதனைகளையோ எதிர்க்கட்சியின் தவறுகளையோ சொல்லி பிரச்சாரம் செய்வது ஒரு வகை. விமர்சனம் மூலமோ, தனிநபர் எதிர்ப்பு விமர்சனம் மூலமோ பிரச்சாரம் செய்வது ஒருவகை. ஆனால் பாஜகவோ இது எது மாதிரியும் இல்லாத புதுமாதிரியாக பிரச்சாரம் செய்வதைத்தான் கடந்த பாராளுமன்ற தேர்தலில் துவங்கி தற்போதைய கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் வரைக்கும் பின்பற்றுகிறது. அந்த யுத்தியை முன்நின்று வழிநடத்திக் கொண்டு செல்வது வேறுயாருமல்ல, நமது பிரதமரேதான்.

இடத்திற்கு தகுந்தாற்போல மாற்றிப் பேசுவது மோடிக்கு கைவந்த கலை. ஆசிஃபா பற்றி இங்கிலாந்தில் பேசிய பிரதமர்கற்பழிப்பை வைத்து அரசியல் செய்யக்கூடாது என்று பேசிவிட்டு கர்நாடக தேர்தல் பிரச்சாரத்தில் தலித் பெண்கள் கற்பழிப்புக்கு காங்கிரஸ் என்ன பதில் வைத்திருக்கிறது என்று கூசாமல் மாற்றிப் பேசினார்.

மதத்தை வைத்து பிளவுடுத்தி, அச்சுறுத்தி வாக்குளை கவர்வது பாஜகவின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. இப்போது அவர்கள் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் பொய்யைச் சொல்லி அல்லது வரலாற்றை மாற்றிக் கூறி

மக்களை குழப்புவது. இப்படி பொய்யானவற்றை சொல்லி ஓட்டுப் பிச்சை பெறுவதில் மோடி பிசியாக இருக்க, அவரது தொண்டர்பொடிகளோ பாஜகவின் ஸ்பெசாலிட்டியான ஃபோட்டோஷாப், பாகிஸ்தான் ஜிந்தாபாத் கோசம் இவற்றைக் கொண்டு வாக்காளர்களை ஏமாற்றுவதில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இப்படி செய்யும் எதிலுமே மண்டையில் இருக்கும் கொண்டையை மறைக்க மறந்து விடுகின்றனர். சீக்கிரமே அவர்களது புளுகுமூட்டைகள் அவிழ்ந்துவிடுகிறது.

ஆனால் இப்படி அவர்கள் அவிழ்த்துவிடும் பொய், புரட்டுகளை நிரூபிப்பதிலே எதிர்முகாமில் இருப்பவர்களின் உழைப்பு வீணடிக்கப்பட்டுவிடுவதால் ஆக்கப்பூர்வமான பிரச்சாரங்களை முன்னெடுக்க முடியாமல் பாஜகவிற்கு சாதகமாகவும் மாறிவிடுகிறது.

சமீபத்தில் நடந்த ஒரு பிரச்சாரத்தில் பிரதமர் மோடி இந்தியாவின் முன்னாள் இராணுவ தளபதிகளான ஜெனரல் கரியப்பா, திம்மையா இருவரையும் குறிப்பிட்டு அவர்களைப் பற்றிய தவறான தகவல்களை கூறியிருக்கிறார். வரலாறு முக்கியம் பிரதமர் அவர்களே என்று வரலாற்றாய்வாளர்கள் பலரும் மோடியை விமர்சித்து எழுதியிருக்கின்றனர். சமீபத்தில் பாராளுமன்றத்திலும் ராஜிவ் காந்தி, இந்திரா காந்தி, பெனசீர் பூட்டோ பற்றிய தவறான தகவல்களை சொல்லி சமூக வலைத்தளங்களில் இழிப்பிற்கும், பழிப்பிற்கும் ஆளானார். ஆனால் அதையெல்லாம் துடைத்தெறிந்துவிட்டு அடுத்த பொய்யை நோக்கி சென்றுவிடுவதுதான் அவரது வெற்றியின் இரகசியம்.

மோடியின் பக்தர்கள் கர்நாடக தேர்தலில் சில கோல்மால் காரியங்களை செய்ய முயற்சித்து மாட்டிக்கொண்டுள்ளனர். கர்நாடகத்தில் இருக்கும் ஊழல் அரசை அகற்ற வேண்டும் என்று ராகுல் காந்தி பேசுவது போன்ற ஒரு பிரச்சார வீடியோவை சமூக வலைத்தளங்களில் பரவவிட்டனர். சொந்த கட்சியை ஊழல் ஆட்சி என்று ராகுல் வர்ணிக்கிறார் என்ற பரப்புரையை காங்கிரசார் முறியடித்தனர். அந்த வீடியோவில் ராகுலுக்கு பின் இருக்கும் பதாகையில் 2013

ஏப்ரல் மாதத்தில் அந்த நிகழ்வு நடந்ததாக இருந்தது. அப்போது இருந்த எடியூரப்பாவின் ஆட்சியைத்தான் ராகுல் விமர்சித்ததாக நிரூபிக்கப்பட்டது. இப்போது தங்களது முதல்வர் வேட்பாளர் பற்றிய விமர்சனத்தை பாஜகவினரே பரப்பியிருப்பது நகைப்புக்குரியதாகிருக்கிறது.

காங்கிரசின் முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் பாகிஸ்தான் ஜிந்தாபாத் கோசம் இடுவது போன்ற ஒரு வீடியோவைப் பரப்பினார்கள். ஆனால் அந்த வீடியோவில் எங்கும் காங்கிரசின் கொடி இருப்பதாகத் தெரியவில்லை. அது தேர்தல் பிரச்சாரம் போலும் இல்லை. அந்த காணொலியும் பொய் என்று காங்கிரஸ் நிரூபித்திருக்கிறது. எங்கேயாவது கூட்டத்தில் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கம் வந்தால் அது யாரால் எழுப்பப்பட்டிருக்கும் என்பதை ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களைக் கேட்டால் சொல்வார்கள்.

இப்படி பொய்யையும், புரட்டையும், தவறான வரலாறுகளையும் சொல்லி வாக்காளர்களைக் குழப்பி அந்த குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க மோடியும், பாஜகவினரும் முயன்று வருகின்றனர். அந்த முயற்சிகளுக்கு சரியான பதில்கள் காங்கிரசால் தரப்பட்டாலும் கூட மக்கள் யாரை நம்புகிறார்கள் என்பதை தேர்தல் முடிவுகள்தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இருபத்தைந்து வருடங்கள் நல்லாட்சி வழங்கிய இடதுசாரி அரசை இதே மோடியின் பொய்ப் பிரச்சாரத்தை நம்பித்தான் திரிபுரா மக்கள் தூக்கியெறிந்தார்கள் என்பதை சமீபத்திய வரலாறு நமக்கு பாடம் உணர்த்துகின்றது.

அதே சமயத்தில் பொய்யைக் கூறி ஆட்சிக்கு வந்த திரிபுரா முதல்வரின் இலட்சணத்தைப் பார்த்து நாடு சிரிக்கிறது. ஐந்து வருடங்களாக வெறும் பொய்களை மட்டுமே சொல்லி ஆட்சி செய்துகொண்டிருக்கும் பாஜக அரசு தற்போதும் அதேபோன்ற பொய்களை சொல்லி ஆட்சிக்கு வர துடிக்கின்றது. ஏற்கனவே ஏமாந்தது போல மீண்டும் ஏமாறாமல் இந்திய மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.



# 8 இந்திய முஸ்லிம்கள் டுடே

(2014 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு எழுதிய கட்டுரை)

*இந்தியா டுடே, மார்ச் 19 இதழில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்களின் வலிமை என்ன என்பது குறித்து விரிவான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. இந்திய மக்கள் தொகையில் 14 சதவிகிதம் அதாவது கிட்டத்தட்ட 20 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மொத்தம் உள்ள 543 நாடாளுமன்றத் தொகுதிகளுள் 46 தொகுதிகளில் முஸ்லிம்கள் 30%க்கும் அதிகமாக உள்ளனர். 110 தொகுதிகளில் முஸ்லிம்களது வாக்கு, வெற்றி-தோல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*

*சுதந்திரம் பெற்ற இந்த 68 வருடங்களில் ஒருமுறை மட்டுமே முஸ்லிம் எம்.பி.க்களின் எண்ணிக்கை இரண்டிலக்க சதவிகிதத்தினை (10%) எட்டியுள்ளது (1980).*

*தற்போதைய முஸ்லிம் எம்.பி.க்களின் எண்ணிக்கை 30 மட்டுமே (6%). கிட்டத்தட்ட 20 மாநிலங்களிலிருந்து ஒரு முஸ்லிம் எம்.பி.கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. முஸ்லிம்கள் மீது அக்கறை கொண்டுள்ளதாக காட்டிக் கொள்ளும் தேசிய, மாநில கட்சிகள் அவர்களை வெறும் ஓட்டு வங்கிகளாக மட்டுமே பயன்படுத்துகின்றன என்பதற்கு இந்த எண்ணிக்கை சிறந்த உதாரணம்.*

*அசாமில் 31% முஸ்லிம்கள் உள்ளனர். ஆனால் 14 எம்.பி.க்களில் 2 பேர் தான் முஸ்லிம்கள். உபியில் 19%*

முஸ்லிம்களுக்கு 7 எம்.பி.க்களே உள்ளனர். கர்நாடகாவில் 13% முஸ்லிம்களுக்கு ஒரு எம்.பி.கூட இல்லை.

அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் நேரத்தில் மட்டுமே முஸ்லிம்களது நினைவு வருவது வாடிக்கை. ஒவ்வொரு தேர்தலிலும் முஸ்லிம்களது ஓட்டைப் பெறுவதற்கு அவை பகீரத முயற்சிகளை மேற்கொள்கின்றன. முஸ்லிம்கள் எப்போதும் காங்கிரஸுக்கே சாதகமாக இருந்துள்ளனர். 2009இல் 36% முஸ்லிம்கள் காங்கிரஸுக்கு ஆதரவாக ஓட்டளித்துள்ளனர். தற்போது 'மோடி அலை' என்ற பூச்சாண்டியினைப் பயன்படுத்தி முஸ்லிம்களது ஓட்டுக்களை கவர பி.ஜே.பி. நினைக்கின்றது.

மோடியினுடைய கூட்டங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொள்வதுபோலப் படம் காட்டுவது, வாடகை முஸ்லிம்களுடன் மோடி கை குலுக்குவது, கட்டிப்பிடிப்பது, பா.ஜ.க.வில் முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக சேர்ந்துள்ளதாக செய்தி வெளியிடுவது என்று கலங்கிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்து வருவது நாடறிந்தது போலவே, இவை போன்ற செய்திகளை தயாரிப்பதற்கும் அவற்றை விளம்பரங்களாக வெளியிடுவதற்கும் 400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதும் நாடறிந்த ஒன்றாகும்.

உ.பி.யில் முஸ்லிம்கள் பெரும்பாலும் சமாஜ்வாடிக்கே வாக்களித்து வந்துள்ளனர். மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி முஸ்லிம்கள் வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றார். தமிழகத்தில் சொற்ப இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தது யார்? என்பதில் தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும் அறிக்கைப் போர் நடைபெற்று வருவது தமிழகம் அறிந்ததே. இப்படி நாடு முழுவதும், தேர்தல் வந்துவிட்டால் முஸ்லிம்களது கால்களைப் பிடிக்கும் அரசியல் கட்சிகள் தேர்தலுக்குப் பிறகு காலை வாரிவிட்டு விடுகின்றனர். முஸ்லிம்களும் கையில் கருப்பு மையினை இட்டுக் கொண்டு, தங்கள் வாழ்வின்கருப்புப்பக்கங்களைஅதிகரித்துக்கொள்கின்றனர்.

உ.பி, குஜராத், மேற்கு வங்கம், பிஹார், அசாம் என்று எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும் முஸ்லிம்களின் வாழ்வு நிலை மிகவும் பின் தங்கியே உள்ளது. அடிப்படை சுகாதார வசதிகளான உறைவிடம், கழிவறை வசதிகள்கூட இல்லாத நிலையில்தான் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம்களது உள்ளங்களில் இருந்து இன்னும் பாபரி மஸ்ஜித், கோத்ரா, அசாம், முசாஃபர்நகர் என்று படுகாயம்பட்ட பல்வேறு வடுக்கள் மறையாமல் உள்ளன. இன்றும் முஸ்லிம்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். எங்கு குண்டுவெடிப்பு நடந்தாலும் முஸ்லிம்கள் பலிகடாக்கள் ஆக்கப்படுவது தொடர்கதையாகி வருகின்றது. இது இந்தியா டுடேவின் கருத்துக் கணிப்பிலும் வெளியாகியுள்ளது.

முஸ்லிம்கள் உள்நாட்டில் உழைத்து முன்னேறினால்கூட அந்தப் பணம் வெளிநாடுகளில் இருந்து வந்ததோ என்கிற பார்வை மற்றவர்களிடத்தில் உள்ளது. இன்னொரு புறம் அவர்கள் இந்தியாவிற்கு எதிராக வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் விளையாட்டில் வெற்றி பெற்றதைக் கொண்டாடியதற்கு தேச துரோக வழக்கு தொடுக்கப்பட்டது சமீபத்திய உதாரணம். சச்சார் கமிட்டி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல் ஒருபுறம் தேசதுரோகிகள், இன்னொரு புறம் சமாதானப்படுத்தப்பட்டவர்கள் என்ற இரட்டை சுமையினை முஸ்லிம்கள் சுமக்கின்றனர்.

ஆனால் முஸ்லிம்கள் இவை யாவற்றையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அவர்கள் நரேந்திர மோடியை ஆதரிக்க முடிவு செய்துவிட்டனர் என்பதுபோல் இந்தியாடுடே சித்தரிக்க முயன்றுள்ளது. குஜராத்தின் வளர்ச்சியில் முஸ்லிம்களும் பயனடைந்துள்ளதாகவும், அவர்கள் அதனை விரும்புவதாகவும் இந்தியா டுடே பசப்புகின்றது. குஜராத்தின் வளர்ச்சி என்பது உண்மையா என்ற கேள்விக்கே இன்னும் பதில் வராத நிலையில் அதில் முஸ்லிம்களும் பயனடைந்துள்ளனர் என்ற புதுக்கதையை

இந்தியா டுடே புனைந்து, தன் ஊடக நேர்மையை வெளிச்சம் போட்டிருக்கிறது.

அல்லாஹ்வின் இல்லமான மஸ்ஜிதைப் பற்றிய தெளிவில்லாத ஒரு முஸ்லிம், ''பாபர் மசூதிக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை; ஊழல் இல்லாத ஆட்சி வேண்டும்'' என்று கூறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் அவர் மோடியினை ஆதரிக்கின்றார் என்று சொல்ல வருகின்றனர். இதுபோன்ற பெய்டு ஸ்பீக்கர்களுடைய கருத்துகளை எடுத்துக் கொண்டு ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்த நினைக்கும் இந்தப் போக்கு இன்றைய ஊடகங்களின் பொதுப் புத்தியாக உள்ளது. இவற்றையெல்லாம் கொட்டை எழுத்துக்களில் போட்ட இந்தியா டுடேவில் விரக்தியுடன் முஸ்லிம்கள் பலர் கூறியுள்ள கருத்துக்களை ஏனோ சின்னதாக போட்டு தங்கள் மதச்சார்பின்மையினை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தியா டுடேவின் கட்டுரைகளில் நிறைய முரண்பாடுகள் உள்ளதைக் காண முடிகின்றது. கட்டுரையின் துவக்கத்தில் அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் பயிலும் முஸ்லிம் மாணவர்களது உடை, அவர்களது உடைமைகள் ஆகியவை குறித்து வர்ணித்துள்ளமையும், அந்த ஆசிரியரது உரையாடலையும், உடையினையும் கோர்த்திருக்கும் முறையும் முஸ்லிம்களது கலாச்சார பரிமாணங்களைக் கிண்டல் செய்வது போல் உள்ளது. கோத்ரா பகுதி முஸ்லிம்கள் 2002க்குப் பிறகு கல்வியில் முன்னேறியுள்ளதாக ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளனர். ஆனால் அதற்கு அரசின் பங்களிப்பு என்ன என்பது குறித்து எதுவும் குறிப்பிடப் படவில்லை. கோத்ரா ரயில் எரிப்பு நிகழ்வு குறித்து இன்னும் தெளிவான உண்மைகள் வெளிவராத நிலையில் குஜராத்தில் உள்ள கஞ்சி முஸ்லிம்களே சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு தீ வைத்ததாக தீர்ப்புக் கூறியுள்ளது இந்தியா டுடே. ஒரு முஸ்லிம் பெண் தனது குழந்தையுடன் ஆப்பிள் மடிக்கணினி வைத்துள்ளதை காட்சிப்படுத்தியிருப்பதன் மூலம் முஸ்லிம்கள் இந்தியாவில் வளர்ச்சி அடைந்துள்ளனர்

என்ற மாயையினை ஏற்படுத்த முயன்றுள்ளனர். ‘‘எங்களுக்கு மதரஸாக்கள் வேண்டாம். பள்ளிக்கூடங்களே வேண்டும்’’ என்று ஒருவர் கூறியுள்ளதை ஒட்டுமொத்த கிராம மக்களின் மனநிலை என்று கூறியுள்ளதன் மூலம் முஸ்லிம்கள் தங்கள் பாரம்பரிய கல்வி முறையினை வெறுப்பதாக இந்தியா டுடே சித்தரிக்க எத்தனிக்கிறது.

பா.ஜ.க.வின் அடிச்சுவடே இல்லாத கேரளாவிலும் முஸ்லிம்கள் மோடிக்கு வாக்களிக்கப் போவதாக சொல்லியிருப்பதன் மூலம் இந்தியா டுடே சொல்ல வரும் செய்தி என்ன?

ஒட்டுமொத்தமாக சில குறைகள் இருந்த போதிலும் இந்தக் கட்டுரைகள் மூலம் இந்தியாவில் முஸ்லிம்களின் பலம், இரண்டாம் தர குடிமக்களாக புறக்கணிப்புக்கும், சந்தேகப் பார்வைகளுக்கும் மத்தியில் இருதலைக் கொள்ளி எறும்புகளாக வாழ்ந்து வரும் அவர்களது மனோநிலை, பின்தங்கியவர்களை விடவும் கீழ்நிலையில் வாழும் அவர்களது வாழ்க்கை நிலை, விகிதாச்சார பிரதிநிதித்துவம் குறித்த அவர்களது பார்வை என்று முஸ்லிம்கள் குறித்த விரிவான நேர்மறைத் தகவல்கள் சிலவும் தரப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் குறித்து மற்றவர்கள் கவலைப்படுகின்றனர்; அல்லது கவலைப்படுவதாக ஆவணப்படுத்துகின்றனர். ஆனால் முஸ்லிம் சமுதாயத்தினரைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் தலைவர்கள் தங்கள் இருப்பு குறித்து மட்டுமே கவலை கொண்டிருப்பதுதான் இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் தலையாய பிரச்னை.

மாறுமா இந்த இழிநிலை?

★ ★ ★



# 9

# போராடுவது தீவிரவாதமா..?

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அறவழியில் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது அத்துமீறுதலையும், அடக்குமுறையையும் ஏவும் போக்கு அதிகரித்து வருகின்றது. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக கட்டுக்கோப்புடனும், ஒழுங்குடனும் போராடிய மாணவ, இளைஞர்கள் மீது காவல்துறையை ஏவி அரச வன்முறையைக் கட்டவிழ்த்ததுடன் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கியதற்காக அப்பாவி மீனவ மக்களின் வாழ்வாதாரங்களையே சிதைத்தது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதோடு பல மாணவர்கள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு இன்றுவரை அவை நீதிமன்றங்களில் நிலுவையிலும் உள்ளது.

ஈழத் தமிழர்களுக்காக அமைதியான முறையில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவேந்தல் அனுசரித்த திருமுருகன் காந்தி உட்பட நான்கு தோழர்கள் மீது எந்த முகாந்திரமும் இல்லாமல் குண்டர் சட்டத்தை வன்முறையாக திணித்து சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொண்டது.

மக்களின் வாழ்வாதாரத்தையே அழிக்க வந்த ஹைட்ரோகார்பன், ஓஎன்ஜிசி எண்ணெய் நிறுவனங்களை எதிர்த்து விழிப்புணர்வு பிரசுரங்கள் விநியோகித்த மாணவி வளர்மதி மீது குண்டர் சட்டத்தை பிரயோகித்து நீதிமன்றம் மூலம் விடுவிக்கப்பட்டார்.

நீட் எனும் சமூக அநீதியால் படுகொலை செய்யப்பட்ட அனிதாவைத் தொடர்ந்து தன்னெழுச்சியாக மாணவ, இளைஞர்கள் அறவழியில் தங்களது எதிர்ப்பை அழுத்தமாக பதிவு செய்தனர். ஆனால் அரசாங்கம் போராடியவர்கள் மீது காவல்துறை மூலம் அடக்குமுறையை ஏவுவதுடன் கடுமையான பிரிவுகளில் வழக்குகளையும் தொடுத்தது, நாம் வாழ்வது ஜனநாயக நாட்டில்தானா என்ற கேள்வியை எழுப்புவதை தவிர்க்க முடிவதில்லை.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சமாதி முன்பு அரசியல்வாதிகள் அமர்ந்து அம்மாவின் ஆசைக்கு விரோதமாக ஆட்சி நடப்பதாக தர்மயுத்தம் துவக்கலாம். ஆனால் அதே அம்மாவின் ஆசைக்கும் கனவுக்கும் விரோதமாக நீட் வன்முறையாக தமிழகம் மீது திணிக்கப் படுவதை எதிர்த்து அவரது சமாதியில் அமர்ந்த மாணவர்கள் மீது வழக்குகளை பதிவு செய்து, பெண்கள் என்றும் பாராமல் கடுமையாக குற்றவாளிகளைப் போல நடத்தினார்கள்.

சென்னையில் போராடிய திருநங்கைகள் மீது ஆறு பிரிவுகளில் வழக்கு, நுங்கம்பாக்கம் மாணவிகளுக்கு ஆதரவாக நின்ற மூன்று கல்லூரி மாணவர்கள் மீது வழக்கு, மதுரை தமுக்கம் மைதானத்தில் அமைதியாக போராடிய சிறுவர்கள் உட்பட 89 பேர் மீது வழக்கு, திருவில்லிப்புத்தூர் கோபுரம் மீது ஏறி போராடிய மாணவர்கள் மீது வழக்கு, சேலத்தில் போராடிய 1072 பேர் மீது வழக்கு, பெசன்ட் நகரில் போராட்டம் நடத்திய 16 பேர் மீது வழக்கு இப்படி கடந்த மூன்று நாட்களில் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கானோர் மீது கடுமையான பிரிவுகளில் வழக்கு பதியப்பட்டது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி 100 நாட்கள் அமைதியான முறையில் போராடிய பொது மக்கள் மீது அரசாங்க வன்முறையை ஏவி 13 அப்பாவி பொது மக்களை சுட்டுக்கொன்றது இன்னும் நீங்காத் துயரமாக நம் இதயங்களில் நிறைந்துள்ளது.

அவர்கள் செய்த குற்றம் என்ன? எதற்காக போராடினார்கள்..? வியாபாரிகளை தானாக முன்வந்து

கடைகளை அடைக்க சொன்னார்களா..? வாயில் சொல்ல முடியாத வார்த்தைகளால் வசைபாடினார்களா..? பேருந்தை எரித்தார்களா..? உண்மையில் இந்த குற்றங்களை செய்திருந்தால் அமைச்சர் பதவியும் அதிகாரமும் பரிசளிக்கப்பட்டிருக்கும். அவர்கள் போராடியது எதிர்கால சமுதாயத்திற்காக. பெரியார், அண்ணா போன்ற தலைவர்கள் போராடிப் பெற்றுத் தந்த சமூக நீதிக்கு குந்தகம் ஏற்படுவதைத் தடுக்க களம் புகுந்தார்கள். காமராஜர் உருவாக்கிய கல்விக் கட்டமைப்பு குலைக்கப்படுவதைக் கண்டு மனம் வெதும்பி போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதுதான்.. அதுதான் அவர்கள் செய்த மகா பெரிய குற்றம்.

பல மாணவர்களைப் போல பிக் பாஸ் பார்த்து, ஓவியாவா ஜூலியா என்று சமூக வலைத்தளங்களில் சண்டை போட்டுக் கொண்டிருந்தாலோ, ப்ளூ வேல் மூலம் உயிரை மாய்த்துக் கொண்டிருந்தாலோ அவர்களுக்கு எந்த பாதிப்பும் வந்திருக்காது. அதெப்படி சமூகத்தில் முளைக்கும் கள்ளிச் செடிகளை களையெடுக்க களம் இறங்கலாம்..? அணி அணியாய் பிரிந்து தமிழகத்தை விற்றுப் பிழைக்கும் ஆளும்கட்சியினை எப்படி எதிர்க்கத் துணியலாம்..?

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் போராட்டங்கள் அதிகளவில் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று பெருமிதத்துடன் சொன்ன அதே சட்டமன்றத்தில் நின்று கொண்டு போராட்டத்தில் தேசவிரோதிகள் புகுந்துவிட்டனர் என்று முன்னாள் முதல்வரும், பெண்களையும் குழந்தைகளையும் வைத்து போராடுவது ஃபேசனாகிவிட்டது என்று இந்நாள் முதல்வரும் பின்னால் வரும் சமுதாயம் பாடம் படிக்க ஏதுவாக பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வார்த்தைகளை உதிர்த்துள்ளனர். ஜெயலலிதா கைது செய்யப்பட்ட போது பேருந்தை எரித்து மூன்று மாணவிகளை கொன்ற சமூக விரோதிகளைக் கொண்டிருந்தது யார்..? வீதிகளில் ஒப்பாரி வைத்து கடைகளை அடைக்க சொல்லி,

ரோட்டுக்கடையை உடைத்து வயதான பெண்மணியை தாக்கிய மாதர் குல விளக்குகளை போராட்டகளத்தில் இறக்கியது யார்..? இந்த கேள்விகளை கேட்டுவிட்டு பிறகு போராட்டம் பற்றியும், போராடுபவர்கள் பற்றியும் முன்னாள், இந்நாள் முதல்வர்கள் பேசுவது நலம்.

மது அரக்கனால் கணவனை இழந்து கைம்பெண்களாக நிற்கும் அபலைகள், தந்தையை இழந்து அனாதைகளாக எதிர்காலம் பற்றிய கேள்வியுடன் நிற்கும் குழந்தைகள் இவர்களைவிட மதுவை எதிர்த்து போராட தகுதியுடையவர்கள் வேறு யார் இருக்கமுடியும். ? தான் பெற்ற கல்வியால் சமூகத்திற்கு பலன்தர முடியவில்லையே என்று ஏங்கியிருந்த இளைஞர் சமுதாயத்திற்கு தன் எதிர்கால சந்ததியின் கல்வி உரிமையை கானல் நீராக்கும் ஓர் அரக்கனை அழிக்க களம்புகும் வாய்ப்பு கிடைத்தால் அதனைத் தவறவிடுவார்களா..?

சல்லிக்கட்டு போராட்டம் மூலம் இப்படியும் போராட முடியும் என்று உலகிற்கு எடுத்துக்காட்டிய எமது இளைய சமுதாயத்தை இப்படி அடக்குமுறைகள் மூலமாகவும், வழக்குகள், சிறைக் கொட்டடிகள், சர்வாதிகாரம் மூலமும் அடக்க நினைப்பது மக்களாட்சிக்கு அழகல்ல. ஒரு அரசு தனது கடமையில் இருந்து தவறும்போது மக்கள் வீதிகளுக்கு வரத்தான்செய்வார்கள். தனது தவறை உணர்ந்து நேர்வழியில் திரும்பி மக்கள் நலநடவடிக்கைகளில் இறங்குவதுதான் நல்ல ஆட்சியாளர்களுக்கு அழகு. அதைவிடுத்து போராடுபவர்களை தீவிரவாதிகளாகவும், சமூகவிரோதிகளாகவும் சித்தரித்து கடுமையான பிரிவுகளில் வழக்குகளை ஏவுவது நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடும் என்பதே நிதர்சனம். அரசு உணர்ந்து செயல்படவேண்டும்.

★ ★ ★



# 10

# கலைக்கப்படுமா கள்ள மௌனம்?

**ச**மீபத்தில் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். மத்திய அரசு நிறுவனங்களால் மட்டும் எப்படி பல ஏக்கர் நிலங்களை இப்படி வளைத்துப் போட முடிகின்றது என்ற எனது நீண்ட கால மலைப்பு அங்கும் தொடர்ந்தது. அதுவல்ல விசயம் இப்போது. சென்ற இடத்தில் ஒரு மரணம். மாலை நேரம் என்பதால் அமைதி சூழ்ந்திருந்த அந்த வளாகம் மரணமடைந்தவரின் உறவினர்களின் அழுகையால் அமைதியிழந்தது. ஒரு மூதாட்டி தரையில் புரண்டுகொண்டே அழுதது காண்பவர் கல்நெஞ்சையும் கூட கரைத்துவிடும் போல் இருந்தது. நான் உட்பட பலரும் அங்கே நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களால் வேறு என்ன செய்துவிட முடியும்..?

எனக்கு நினைவுகள் சற்று பின்னோக்கி ஹரியானா ரயில் நிலையத்திற்கு சென்றது. இங்கே அழும் இந்த உறவினர்களைப் போலத் தானே ஜுனைதின் உயிரற்ற உடலை தன் மடியில் கிடத்தி ஜுனைதின் சகோதரன் கதறியிருப்பான்..? இங்கே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் போலத் தானே ஜுனைத் தாக்கப்பட்ட போதும் அங்கே சுற்றியிருந்தவர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள்..? ஆனால் எங்களைப் போல அல்ல. அவர்களால் ஏதேனும் செய்திருக்க முடியும். ஒரு

பாலகனின் உயிர் எந்த காரணமுமின்றி கொல்லப் பட்டிருப்பதை அவர்களால் தடுத்திருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. வேடிக்கைப் பார்த்தார்கள். தடுத்தால் தாங்களும் தாக்கப்படுவோமோ என்ற அச்சம் சிலருக்கு; பாகிஸ்தான் செல்ல வேண்டியவர்கள் கபர்ஸ்தான் செல்வதில் குற்றமேதுமில்லை என்ற உள்ளூர மகிழ்ச்சி ஒரு சிலருக்கு; இந்த மகிழ்ச்சியை ஒரு சிலர் அங்கே வெளிப் படுத்தியும் தங்கள் தேசபக்தியை நிரூபித்துள்ளார்கள்..!

இன்று பொது சமூகத்தின் புத்திகளில் ஒரு எண்ணம் ஆழமாக வேரூன்றியுள்ளது. பிறருக்கு ஏதேனும் நடந்தால் அது வெறும் செய்தியாக மட்டுமே பார்ப்பது; அதனைப் பற்றி கவலை கொள்ளாமல் இருப்பது; அதனைத் தடுப்பதற்கு முயற்சி செய்யாமல் இருப்பது; ஆனால் அவர்களுக்கு புரிவதில்லை, அந்த செய்தி தனக்கான சம்பவமாக மாற்றம் பெறும்போது பிறருக்கு அது ஒரு செய்தியாகவே தெரியும் என்று. விதைத்ததைத் தானே அறுவடை செய்ய முடியும்..?

ஜெர்மனியில் ஹிட்லர் கோர தாண்டவம் ஆடிய போது எழுதப்பட்ட ஒரு கவிதையினை இங்கே நினைவுகூற விரும்புகின்றேன். (இதில் வந்தனர் என்பதற்கு படுகொலை செய்ய என்று பொருள் கொள்ளவும்)

முதலில் அவர்கள் யூதர்களுக்காக வந்தனர்..

நான் எதுவும் பேசவில்லை.. ஏனென்றால்

நான் ஒரு யூதன் கிடையாது.

பிறகு அவர்கள் இடதுசாரிகளுக்காக வந்தனர்.

நான் எதுவும் பேசவில்லை.. ஏனென்றால்

நான் ஒரு இடதுசாரி கிடையாது.

பிறகு அவர்கள் தொழிலாளர் கூட்டமைப்பினருக்காக வந்தனர்..

நான் எதுவும் பேசவில்லை.. ஏனென்றால்

நான் ஒரு தொழிலாளர் கூட்டமைப்பைச் சார்ந்தவன் கிடையாது.

*பிறகு அவர்கள் என்னிடம் வந்தனர்..*

*ஆனால் அங்கு ஒருவரும் இருக்கவில்லை..*

*எனக்காக எதுவும் பேச..*

இந்த வரிகள் இன்றைய இந்திய சூழலுக்கு எவ்வளவு அப்பட்டமாக பொருந்திப் போகின்றது..?

ஐந்து வருடங்களில் 50க்கும் மேற்பட்ட மரணங்கள்.. எதற்காக..?

தேசத்திற்கு எதிராக சதிச்செயல் செய்ததற்காகவா..? மதத்திற்காக படுகொலைகள் செய்தார்களா..? கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்து சிசுவை வெளியில் எடுத்து எரித்தார்களா..? அப்பாவியை வாகனத்தின் முன் கட்டி வீர தீர செயல் செய்தார்களா..? பாலியல் பலாத்காரக் குற்றங்களில் ஈடுபட்டதற்காகவா..? வழிபாட்டுத்தலங்களை இடித்தார்களா..? மக்கள் பணத்தை வாயில் போட்டுவிட்டு வெளிநாட்டிற்கு சென்று கிரிக்கெட் மாட்ச் பார்த்தார்களா..? தேசத் தந்தையை கொன்றவர்களுக்கு சிலை வைக்க முடிவெடுத்தார்களா.?

உண்மையில் இது போன்ற குற்றங்களை செய்தவர்களுக்கு இந்த தேசத்தில் பதவி, பட்டம், அரசியல் அதிகாரம் என்று ராஜமரியாதை வழங்கப்படுகின்றது. ஆனால் கொல்லப்பட்டவர்கள் செய்த குற்றம் அவர்கள் முஸ்லிம்களாகவும், தலித் இந்துக்களாகவும் பிறந்தது; மாட்டிறைச்சி உண்பவர்களாகவும், மாட்டை வைத்து பிழைப்பு நடத்துபவர்களாகவும் இருந்தது; ஆனால் மாட்டிறைச்சி உண்டதாக, வைத்திருந்ததாக கொல்லப் பட்டதில் எந்த சம்பவத்திலுமே அது உண்மையாகவும் இல்லை. நீ முஸ்லிமாகவும், தலித்தாகவும் இருந்தால் இங்கேஅ வாழும் தகுதியை இழந்துவிட்டாய் என்பதே இந்த கொலைகளில் ஈடுபட்டவர்களின் சித்தாந்தம்..!

அக்லாக் கொல்லப்பட்ட போது அவரைக் கொன்றவர் களுக்கு தண்டனை வழங்குவதற்கு பதில் அவர் வீட்டில்

இருந்தது மாட்டுக்கறிதானா என்று ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. பெஹ்லுகானைக் கொன்றவனுக்கு கலியுகத்தின் சிவாஜி என்று பட்டம் வழங்கப்படுகின்றது. ஒரு அப்பாவியை கேடயமாக பயன்படுத்தியது தேசபக்தியாக பாவிக்கப்பட்டு, பதவி உயர்வு வழங்கி கவுரவிக்கப்படுகின்றது. தேசத்தின் மதச்சார்பின்மை எவ்வளவு தீவிரமாக இயங்குகின்றது..?

இவற்றைத் தடுக்க வேண்டிய இடத்தில் இருக்கும் பிரதமர் புதிய இந்தியாக்களை பிரசவிக்கவும், அடுத்து எந்த நாட்டிற்கு செல்லலாம் என்று சிந்திப்பதிலும் தீவிரமாக இருக்கின்றார். கென்யாவில், இலண்டனில், பாரிசில் தீவிரவாதிகள் தாக்கிய போது உடனடியாக கண்டனம் தெரிவித்தார் பிரதமர். சொந்த நாட்டில் அக்லாக், ஜுனைத், பெஹ்லுகான் என்று தொடர்ச்சியாக படுகொலைகள் செய்யப்பட்ட போது நவதுவாரங்களிலும் தார்க்கோல் வைத்து அடைத்துக் கொண்டுவிட்டார் போலும்.

மிக நீண்ட மௌனத்திற்கு பிறகு வாய்திறந்தார் பிரதமர். தலித்துகளுக்கு பதில் என்னைக் கொல்லுங்கள் என்று முதலைக் கண்ணீர் வடித்தது போல, காந்தியின் சபர்மதி ஆசிரமத்தில் நின்று காந்திக்கு இந்த கொலைகள் பிடிக்காது என்று கோவப்படுகின்றார். அப்போது கூட காந்திக்கு தான் பிடிக்காது என்று கூறினாரே தவிர தனக்குப் பிடிக்காது என்று கூறவில்லை. அதுவும் உறுதியற்ற வார்த்தைகள் என்பது அடுத்த நாள் மேற்கு வங்கத்தில் இன்னொரு கொலை அரங்கேறிய போது தெரிந்துவிட்டது.

ஒரு தேசத்தின் பிரதமராக இந்த படுகொலைகளுக்கான கண்டனத்தை எதிர்பார்க்கவில்லை. அது எதிர்க்கட்சித் தலைவர்களின் வேலை. கடும் தண்டனைகளையே இந்த தேசத்தின் சிறுபான்மை, தலித் சமுதாயம் பிரதமரிடம் இருந்தும், சட்டத்திடம் இருந்தும் எதிர்பார்க்கின்றது. பதவிப்பிரமாணம் செய்துகொண்ட போது இந்த நாட்டு மக்களின் உயிர், உடைமைகளுக்கும் சேர்த்தும் தான்

பொறுப்பேற்றுக் கொண்டதை பிரதமர் சற்று மீள் நினைவுப் படுத்திக்கொள்வது நலம்.

ஜுனைத் படுகொலை பொதுமனசாட்சியை சற்று அசைத்துப் பார்த்தது. அங்கொன்றும் இங்கொன்றும் கண்டனக்குரல்களும், ‘எனது பெயரால் அல்ல’ போன்ற போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. அக்லாக் கொல்லப்பட்ட போதே நாம் விழித்திருக்க வேண்டும். ஆனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துவிட்டோம். இப்போதாவது உறக்கம் களைத்து எழுந்துவிட்டோம். இனி எந்த உயிரும் இந்த தேசத்தில் காவு குடுக்கப்படாமல் காக்க வேண்டியது ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை.

இன்னும் எனக்கு வரும்வரை நான் காத்திருப்பேன் என்று எண்ணினால் உறுதி செய்துகொள்ளுங்கள். உங்களுக்கு வரும்போது உதவிக்கு வர ஒருவரும் இருக்க மாட்டார்கள்..!

★ ★ ★




# தேறுமா ஆறு மாதம்?

(பா.ஜ.க. அரசின் முதல் ஆறு மாத கால ஆட்சிப் பற்றி எழுதப்பட்டது.)

அரியணை ஏறி ஆறு மாதங்களை கடந்தாகிவிட்டது. முன்னெடுக்கப்பட்ட கோஷங்கள் எல்லாம் வெறும் முழக்கங்களாகவே முடங்கிவிட்டது. வளர்ச்சியின் நாயகனுக்கு ஓட்டு போட்டால் தங்கள் வாழ்வை வானளாவ உயர்த்தி விடுவார் என்று வாக்களித்த மக்கள் வாய்க்குள் விரலை வைத்துக் கொண்டுவிட்டனர். கருப்புப் பணத்தை கைப்பற்றி வழங்குவார் என்று எதிர்ப்பார்த்தவர்கள் தங்கள் இருப்புப் பணத்துக்கே மோசம் ஏற்படுமோ என்ற அச்சத்தில் மடிகளில் கைகளை இறுக்கக் கட்டிக் கொண்டுள்ளனர். டீ கடையில் வேலை பார்த்தவர் நம் கவலைகளை நன்கு அறிவார் என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள் அவர் அதானி, அம்பானி என்று கோடீக்களின் கவலையை மட்டுமே கவனிக்கிறார் என்று வெம்பிக் கொண்டிருக்கின்றனர். பத்து வருடம் ஆகிவிட்டது. பக்குவப்பட்டிருப்ப(பா)ர் என்று பசலை கொண்டவர்கள் இன்று பரிவாரங்களின் ஆட்டம் பார்த்து பதறிப் போயுள்ளனர்.

ஆட்சி காலத்தில் 10%ஐ முடித்துவிட்ட ஒரு அரசாங்கம் தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் அதே அளவையாவது நிறைவேற்றியுள்ளதா என்று சீர்தூக்கி பார்ப்பதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

## 1. பல்லிளித்த கருப்புப் பண இரட்சகம்

*கருப்புப் பணத்தை மொத்தமாக மீட்டு ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்குவேன் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், பட்டியல் தர முடியுமா?, முடியாதா? என்று உச்சநீதிமன்றம் குட்டும் அளவுக்கு ஆட்சியாளர்களின் கருப்புப் பண இரட்சகம் இருந்துள்ளது. ஒட்டு மொத்த கருப்பும் வெள்ளையாக மாறி நாட்டிற்குள் திரும்பும் வரை இவர்கள் ஓய மாட்டார்கள் என்பது இவர்கள் பன்னாட்டு முதலைகளுக்கு காட்டிய கரிசனத்தில் தெளிவாகத் தெரிந்து விட்டது.*

## 2. ஆகாசப் பொய்யான விகாஷ் புருஷ்

*''விகாஷ் புருஷ்'' என்று முழக்கமிட்ட கட்சியின் ஆட்சி சென்றதன் நீட்சியாகவேத் தெரிகிறது. ''அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கியது போல்'' இந்தியாவை அப்படியே வளர்ச்சியின் உச்சானிக் கொம்பில் அமர்த்தி விடுவார் என்று நம்பி அளிக்கப்பட்ட வாக்குகள் 'இலவு காத்த கிளி' யாக மாறி விடும் சூழல் தான் இங்கு நிலவுகிறது. விலைவாசியோ, பணவீக்கமோ வெகுவாக குறைந்ததாகத் தெரியவில்லை. மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க முடியாத நிலையில் தாங்கும் சக்தியை சோதிக்கும் விதமாக இரயில் கட்டணத்தை உயர்த்தியது. பிரீமியர் ரயில் கட்டணம் என்று நடுத்தர மக்களின் மடியில் கைவைத்தும் பார்த்தது.*

## 3. பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு

*பெட்ரோல், டீசல் விலையை மட்டும் 10 முறை குறைந்து விட்டதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். 2012 ஆகஸ்டில் ஒரு பேரல் கச்சா எண்ணெய் 110 டாலராக இருந்த போது அப்போதைய அரசு ஒரு லிட்டர் பெட்ரோலை 72 ரூபாய்க்கு வழங்கியது. ஆனால் தற்போது அதே ஒரு பேரல் சர்வதேசச் சந்தையில் 60 டாலராக இருக்கும் போது அவர்கள் வழங்கும் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 64 ரூபாய். நிதர்சனத்தில் இதனை விடவும் குறைவாக வழங்க முடியும்*

என்பதே வல்லுநர்களின் கூற்றாக உள்ளது. மக்களின் நலத்திட்டங்களில் தொலைநோக்குப் பார்வை இல்லாத அரசு வயிற்றில் அடிக்கும் சமையல் எரிவாயு மானியத் திட்டத்தில் தொலை நோக்குப் பார்வையுடன் திட்டமிட்டு அதில் வெற்றியும் பெற்றுவிட்டது இப்போது வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் மானியம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு பின்பு முற்றிலும் நிறுத்தப்படலாம்.

## 4. ஆதார் அட்டையும், பாஜகவும்

காங்கிரஸ் ஆதார் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது அதனை பயனற்ற திட்டம், சட்ட விரோதமாக குடியேறுபவர்களை பாதுகாக்கும் முயற்சி என்று வர்ணித்தவர்கள் தற்போது ஆதார் அட்டையை அரசுத் திட்டங்களில் பயனடைய கட்டாய ஆவணமாக்க முடியாது என்கிற உச்சநீதிமன்ற உத்தரவை காற்றில் பறக்க விட்டுவிட்டு சமையல் எரிவாயு மானியம் மற்றும் இன்ன பிற அரசு சலுகைகளைப் பெற ஆதார் அட்டை கட்டாயம் என்கிற உத்தரவைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். ஆதார் அட்டை குறித்த எந்தக் கொள்கையும் எங்களிடம் இல்லை என்று கூறியவர்கள் அதில் பாதுகாப்பு பலவீனங்கள் இருந்தும் இப்போது கட்டாயமாக்கியுள்ள கொள்கை முரண்பாட்டுக்கு என்ன காரணம் என்பது குஜராத் நாயகனுக்கு மட்டுமே வெளிச்சம்.

## 5. கிளீன் இந்தியா எனும் விளம்பரத் திட்டம்

இந்த ஆறுமாத ஆட்சியின் மணிமகுடமாக ஆள்பவர்கள் நினைப்பது ''ஸ்வச் பாரத்'' என்றும் ''கிளீன் இந்தியா'' என்று அழைக்கப்படும் திட்டம் அதாவது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தூய்மையை கடைபிடிக்க வேண்டும், அதன் மூலம் நாடு தூய்மையடைந்து விடும் என்பதே தாத்பர்யம். மேம்போக்காக நோக்கும்போது ''இது ஆஹா திட்டமாக இருந்தாலும் உற்று நோக்கினால் இது ஸ்வாஹா திட்டம் என்பது தான் உண்மை''. இன்று தேசத்தை அழுக்கடையச் செய்து வருவது வெளிநாடுகளிலிருந்து இந்தியாவின்

கடலோரங்களில் கொட்டப்படும் அணு, இரசாயனக் கழிவுகள், உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பயோ-வேஸ்ட் எனப்படும் மருத்துவ உயிர்க் கழிவுகள், இயற்கை வளங்களை நீர்த்து போகச் செய்யும் தொழிற்சாலைக் கழிவுகள், மண்ணை மலடாக்கும் நெகிழிக்கழிவுகள் இவையனைத்திற்கும் மேல் ஆள்பவர்கள், அதிகாரிகளின் உள்ளங்களில் உள்ள ஊழல் கழிவுகள். நிலைமை இவ்வாறிருக்கையில் கையில் துடைப்பத்தை ஏந்தி கொண்டு கூடவே புகைப்படக்காரர்களைக் கூட்டிக் கொண்டு சாலையில் விழுந்து கிடக்கும் இலைத்தழைகளை பொறுக்குவதுதான் இவர்களின் தூய்மை இந்தியா.

அதிலும் இரவில் குப்பையைக் கொட்டி, விடிந்ததும் அதனை அள்ளும் விந்தையும் நடந்து தூய்மை இந்தியாவை சந்தி சிரிக்க வைத்தது. ஏற்கனவே விளம்பரப் பிரியர்களான பாலிவுட், கோலிவுட், டோலிவுட் ஜாம்பவான்களுக்கு மேலும் விளம்பரம் செய்ய இது ஒரு வாய்ப்பாகி போனது. அரசுப் பள்ளியில் பயிலும் ஓர் மாணவி மாதவிடாய் காலத்தில் தனது நாப்கினை தூக்கியெறிய ஒரு ஒதுக்குப் புறமான குப்பைத் தொட்டியோ, சுகாதாரமான கழிப்பிடமோ இல்லாத ஒரு தேசத்தில் தூய்மை இந்தியா நிகழ்த்தப் போதும் சாதனைதான் என்ன? நடைபாதைகளில் உள்ள குப்பைகளைக் கூட்டுவதை பெருமையாக நினைக்கும் இவர்கள் அதே நடைபாதைகளை தங்கள் வசிப்பிடமாகக் கொண்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த செய்துள்ள முயற்சிகள் தான் என்ன? தினம்தினம் வல்லுநர்கள் வடிவமைத்து தரும் உயர்தரமான பைஜாமாவை அணிந்து கொண்டு தாயைப் பார்க்க சென்றாலும் கேமரா எங்குள்ளதோ அந்த திசையில் முகத்தை வைத்து படம் காட்டும் ஒரு நபருக்கு சக மனிதனின் கழிவை தன் கைகளால் சுத்தம் செய்யும் அவலத்தைக் குறித்து சிந்திக்க நேரம் இருக்குமா? நாட்டின் கடைக்கோடியில் வசிக்கும் குடிமகனும் சுத்தமான இருப்பிடம், சுகாதாரமான உணவு, கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி பெறும்போது தேசம் தன்னாலே தூய்மையாக

மாறும் என்பதை தூய்மை இந்தியா முன்னோடிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

## 6. மேக் இன் இந்தியா

பாரத அரசின் பெருமைத்திட்டங்களில் மற்றொன்று மேக் ஆன் இந்தியா, படித்தவர்களுக்கு மட்டுமே புரியும் வகையில் பெயர் வைக்கப்பட்டு நாட்டின் பெரும்பான்மையினரான பாமரர்களுக்கு மருந்துக்கும் பயனளிக்காத திட்டம். வெளிநாடுகளில் உள்ள பெரு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இந்தியாவின் எஞ்சியுள்ள இயற்கை வளங்களை தாரை வார்க்கும் இந்த திட்டம் மூலம் விகாஷ் புருஷின் அரசு ''ஆலம்பனா, நான் உங்களின் அடிமை'' என்று பன்னாட்டு நிறுவனங்களுக்கு சொல்லாமல் சொல்கிறது.

இத்திட்டம் மூலம் உள்நாட்டில் வேலை வாய்ப்பு பெருகும் என்று காலங்காலமாக அரைக்கப்பட்டு வரும் மாவை புதிய இயந்திரத்தில் மோடி அரசு அரைக்கிறது. ஏற்கனவே இதேபோல பெப்சி, கோலா, ரிலையன்ஸ், டாடா போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்க தாரை வார்க்கப்பட்ட இயற்கை வளங்களால் மண்ணின் மைந்தர்களின் கதி என்ன ஆனது என்பது குறித்த வரலாறு போபால், குஜராத், மேற்கு வங்கம், கேரளா, தமிழகம் என்று நம் கண் முன்னே நிழலாடுகிறது. இருந்த நிலம் பிடுங்கப்பட்டு அருந்த நீர் இல்லாமல் வாழ வைத்த விவசாயம் பொய்த்துப் போய் பிச்சைக்காரர்களாக மாறி, தற்கொலை செய்யும் இழி நிலைக்கு நம் மக்கள் தள்ளப்பட்டனர்.

அவர்கள் கூறும் வேலை வாய்ப்பு, பெரு நிறுவனங்களில் துப்புரவு பணியாளராகவும், கழிவறை சுத்தம் செய்பவர் களாகவும், தோட்டத் தொழிலாளர்களாகவும் இருப்பதுதான் சரி அப்படியே பெரு முதலாளிகள் இந்தியாவில் தொழில் தொடங்கினால் அவர்கள் அடையும் இலாபம் மீண்டும் இந்தியாவில் முதலீடு செய்யப்படுமா என்றால் அதுவும் கிடையாது. அவர்களைக் கட்டுப்படுத்தும் போதிய சட்ட

வலிமை நம்மிடம் உள்ளதா என்றால் இல்லை என்பதற்கு போபால் விஷவாயுக் கசிவு சம்பவம் சோக சரித்திரமாக நின்று மௌனசாட்சி சொல்கிறது. எங்கிருந்தோ வரும் ஒருவன் இந்தியர்களின் முதுகில் சவாரி செய்து அவனது இருப்பைப் பலப்படுத்திக் கொள்ள நம் ஆட்சியாளர்கள் செய்து கொடுக்கும் கள்ளக் கடிவாளமே இந்த ''மேக் ஆன் இந்தியா'' இதன் மூலம் நம்மவர்களின் வங்கியிருப்பு பலமடையும் என்பது தெள்ளிடை நீர்.

## 7. கல்வியில் கரை சேருமா?

எல்லாம் போகட்டும் கல்வியிலாவது கரை சேருமா காவி அரசு? என்று யோசித்தால் அங்கும் ஏமாற்றமே மிஞ்சுகிறது. இடைக்கால பட்ஜெட்டில் பெண்கள் பள்ளிகளில் 28,635 கோடி செலவில் கழிவறை, குடிநீர் வசதி செய்து தரப்படும் என்பதைத் தவிர உருப்படியான அறிவிப்பு எதுவும் இல்லை. ஆனால் கல்வியை காவிமயமாக்கல், சமஸ்கிருதம் பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட வேண்டும். இந்தி திணிப்பு போன்ற தாய்ச்சபையின் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மும்முரம் காட்டத்தொடங்கி விட்டனர். காந்தி ஜெயந்தி விடுமுறை ரத்து என்று கூறினர். கிறிஸ்மஸ் தினத்தன்று பள்ளிகளில் கட்டுரைப் போட்டி நடத்த வேண்டுமென்று அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டனர். முக்கியமாக பிரதமரின் பேச்சை அனைவரும் கேட்க வேண்டும் என்று கட்டாயப்படுத்திய வரலாற்று சிற(ரி)ப்புமிக்க அவலமும் இங்குதான் நடந்தது. இப்படி கையாலாகாத அறிவிப்புகளோடு கல்வித்துறை நின்று விட்டது. எல்லாவற்றிற்கும் மேல் பெரிய காமெடி வெளிநாட்டிற்கு போய் 15நாள் வகுப்பை முடித்த கையோடு ''நாங்களும் ஃபாரின்ல படிச்சு டிகிரி வாங்கிருக்கோம்ல'' என்று மாண்புமிகு மனித வளத் துறை அமைச்சர் பீற்றிக் கொண்டதுதான். இவர்தான் தேசத்தின் கல்விக் கொள்கையை கடைக்கோடி வரை முன்னெடுத்துச் செல்லப் போகிறார், எச்சரிக்கை மக்களே!

## 8. FDI எனும் பொன்சட்டி.

*முந்தைய அரசாங்கம் FDI அறிவித்த போது ''நாட்டை வெளிநாட்டுக்காரனுக்கு விக்கிறாங்க'' என்று தரையில் படுத்துக் கொண்டு அழுது புலம்பியவர்கள் ஆட்சிக்கு வந்ததும் செய்த முக்கியமான வேலை அதே வெளிநாட்டுக் காரங்கள கூப்பிட்டு உனக்கு இவ்ளோ உனக்கு அவ்ளோ என்று பங்கு பிரித்ததுதான். எதிர்பாராத வகையில் நாட்டின் பாதுகாப்பையே ஃபாரின்காரனுக்கு பிரிச்ச கொடுத்தது மைல்கல்!. ரயில்வே, காப்பீட்டுத் துறை என எதையும் விட்டுவைக்கவில்லை டீக்கடைக்காரரின் முதலாளித்துவ மோகம்.*

## 9. அமைச்சர் - பரிவாரங்களின் ஆட்டம்

*நம்பி ஓட்டுப் போட்ட மக்களுக்கு நல்லது தான் செய்ய முடியல அவங்கள நாசமாக்குற வேலையாவது செய்யாம இருக்கலாம்ல அதுவும் இல்லை. ஆட்சிக்கு வந்ததிலிருந்தது அடிபொடிகளின் ஆட்டம் அமர்க்களப்படுத்த ஆரம்பித்து விட்டது. ''நான் கிறிஸ்துவ இந்து'' என்று கோவா முதல்வர் ஆரம்பிக்க முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் இந்துக்களே என்று முட்டாள்தனமாக தொகாடியா உளறி வைக்க, ராமருக்கு பிறந்தவர்களைத் தவிர அனைவரும் வழி தவறியவர்களே என்று மத்திய அமைச்சர் மடத்தனமாக பேச என் நண்பர் ஒருவர் கேட்டார். ''ராமனுக்கு வேற வேலையே இல்லாம புள்ள மட்டும்தான் பெத்துக்கிட்டிருந்தாரானு?'' சரி அதோடு நின்னாங்களா? ஆக்ராவில் 200 முஸ்லீம் குடும்பங்களை அக்னி குண்டம் முன் அமர வைத்து தாய் மதத்துக்கு திருப்புறேன்னு சொன்னாங்க, அடுத்த வாரம் அவர்கள் எல்லாம் பள்ளிவாசலில் தொழுகை வரிசையில் அமர்ந்திருந்தனர் அதற்குள் வெங்கய்யா நாயுடு தாய் மதத்திற்கு திருப்புவது தடுக்கப்பட வேண்டுமெனில் மதமாற்ற தடை சட்டத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று எழுதி வைத்த காகிதத்தைப் படித்து ''இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா'' என்று மனோகரா வசனத்திற்கு அதிபதியானார்.*

இன்னும் இந்த ஆறுமாத ஆட்சியில் பட்டியலிட எவ்வளவோ இருக்கிறது. படித்த மக்கள் ''இரட்சகன்'' ''வளர்ச்சியின் நாயகன்'' என்று தலைமேலே தூக்கிவைத்து கொண்டாடும் நரேந்திர மோடியின் இந்த ஆட்சி சிறிதும் கூட நல்லாட்சியாக இல்லை என்பதே நிதர்சனம் ஆகையால் படித்தவர்களுக்கு புரியும் வகையில் அறிவுத்தளத்தில் நின்று இந்த ஆட்சியின் குறைகளை மக்கள் மத்தியில் எடுத்து வைப்பது நடுநிலையாளர்கள் மீது கடமையாக உள்ளது. அப்படி செய்யும் போதுதான் நாடு நலம் பெற, நல்லவர் வாழ்ந்திட, நல்லாட்சி நமது அடுத்த தலைமுறைக்காவது வாய்க்கும்.

★ ★ ★




# 12

# முரண் அரசும் பெரும்பான்மை அமைதியும்..!

ஒரு குறிப்பிட்ட மதத்தினரை நேரடியாக தாக்கும் அத்தனை அயோக்கியத்தனங்களையும் அதிகாரத் திமிரில் அரங்கேற்றம் செய்து வரும் ஆட்சியாளர்கள்.. அப்படி அவர்கள் செய்யும் அராஜகங்களை பெரும்பான்மை மக்கள் அமைதியாக வேடிக்கை பார்க்கின்றார்கள்.. நிதர்சனத்தில் பெரும்பான்மை மக்களை அவர்களையும் அறியாமல் இந்த நடவடிக்கைகள் எல்லாம் நியாயம்தான் என்ற மன மாயையில் சிக்க வைத்துவிட்டு தங்கள் செயல்திட்டங்களை மிக அழகாக நடைமுறைப்படுத்துகின்றனர் என்பதுதான் உண்மை ..!

ஒருபுறம் முஸ்லிம்களை மீட்டெடுக்கிறேன் பேர்வழி என்று நடவடிக்கைகள் எடுத்துவிட்டு, இன்னொரு பக்கம் அதற்கு முரணான காரியங்களில் ஈடுபட்டுவருகின்றது இந்த சர்வாதிகார அரசாங்கம்..

முஸ்லிம்கள், தலித்களின் உணவு, வியாபார உரிமையில் நேரடியாக கை வைத்த மாட்டிறைச்சி தடை சட்டத்தை பசு பாதுகாப்பு என்ற பெயரில் கொண்டு வந்தனர்.. ஆனால் அந்த மாட்டிறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வேலையை ஆத்மசுத்தியுடன் செய்தனர்..

முஸ்லிம்கள் உடனடியாக விவாகரத்து செய்யும் முறை பெண்களை பாதிப்பதாக கதறி, கண்ணீர் விட்டு அதனை

தடை செய்து சட்டம் இயற்றினார்கள்.. அதே நேரத்தில் இந்து திருமண சட்டப்படி விவாகரத்திற்கு ஆறு மாதம் காத்திருக்கத் தேவையில்லை, ஒரு வாரத்தில் விவாகரத்து பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்தார்கள்..

முஸ்லிம் பெண்கள் தனியாக ஹஜ் செய்யலாம் என்று புரட்சி செய்தார்கள்.. ஆனால் தேசத்தின் பெரும்பாலான கோவில்களில் பெண்கள் நுழைவிப்பு, ஆடைக் கட்டுப்பாடு போன்றவற்றை குறித்து பேச திராணியில்லாமல் துவாரங்களை அடைத்து வைத்திருக்கின்றனர்..

வீண் செலவு, தனிமனித, மத விடயங்களுக்கு அரசின் மானியம் தேவையில்லை என்று முஸ்லிம்களின் ஹஜ் பயண மானியம் ரத்து என்று அறிவித்துள்ளனர்.. ஆனால் நாளொரு அறிவிப்பு, பொழுதொரு விளம்பரமாக கோவில் களுக்கு சுற்றுப்பயணம் அறிவித்து அரசே முழுசாக டூரிஸ்ட் கைடாக மாறி வருகிறது..

அரசால் அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரையை உடனடியாக அமல்படுத்துகிறோம் என்கிறார்கள்.. ஆனால் முஸ்லிம்களின் நல்வாழ்விற்காக ரங்கநாத் மிஸ்ரா, ராஜேந்திர சச்சார் ஆணையங்களின் பரிந்துரைகள் அரசாங்க அலுவலகங்களின் பரண்களில் தூசி படிந்து தூங்கிக் கொண்டிருக்கின்றது..

உச்ச நீதிமன்ற உத்தரவினை நடைமுறைப்படுத்து கின்றோம் என்கிறார்கள்..இது போல உச்ச நீதிமன்றத்தின் ஓராயிரம் உத்தரவுகள் இன்னும் காற்றிலே கலந்து மூச்சை அடைத்துக் கொண்டிருக்கின்றன..

மானியக் குறைப்பு நடவடிக்கை என்று மார்தட்டிக் கொள்கின்றனர்.. ஆனால் ஒட்டுமொத்தமாக வழங்கப்படும் மானியத்தில் இது பூஜ்ஜியத்திற்கு மிக அருகிலான சதவிகித மானியம்.. ஆனால் மொத்த மானியத்தில் முக்கால்வாசியை முழுங்குவது பெருமுதலாளிகளுக்கு வழங்கப்படும் வியாபார மானியம், பணமுதலைகளுக்கு வழங்கப்படும் வரிவிலக்கு மானியம் இவற்றில்தான்..இவற்றைக்

குறித்தெல்லாம் மறந்தும் கூட பேச முற்படுவதில்லை இந்த முற்போக்கு அரசாங்கம் ..

மானியத் தொகையை சிறுபான்மை பெண்களின் கல்விக்கு செலவிடப் போவதாக அக்கறை காட்டுகின்றனர்.. ஆனால் தேசத்தின் பல மாநிலங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் பள்ளிக்கல்வியைக்கூட பெறமுடியாமல், பாலியல் பண்டங்களாக, பஞ்சாயத்தினரின் பொதுச் சொத்தாக, பாதுகாப்பின்றி, பராமரிப்பின்றி விடப்பட்டுள்ள பெரும்பான்மை இந்து மத இளம் சிறுமிகள், பெண்களைப் பற்றி பாராமுகமாக இருக்கின்றனது இந்த அரசு..

முஸ்லிம் பெண்களை காக்க வந்த ரட்சகர்களாக தங்களை காட்டிக் கொள்கின்றனர்..ஆனால் பிரதமரின் மனைவி, எம்பியின் மகனால் துரத்தப்பட்ட பெண் இப்படி பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான அபலைகள் குறித்து சிந்திக்காத சிந்தனைக் குருடர்களாக இருக்கின்றார்கள் ஆட்சியாளர்கள்..

இப்படி சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத ஆட்சியாளர்களைசகித்துக்கொண்டு வாழும் பெரும்பான்மை மக்கள், நாளை அவர்களது கை தங்களது அடிமடியில் இருப்பதையும் பிடுங்க துணியும் என்பதை மறந்து வாழ்கின்றனர் அல்லது மறக்கடிக்கப்பட்டுள்ளனர்.. அதற்கான முன்னோட்டமாக பணமதிப்பழிப்பு, GST, வங்கிகள் பாதுகாப்பு மசோதா என்று ஏற்கனவே சோதனை வெள்ளோட்டங்கள் துவங்கப்பட்டுவிட்டது..இன்னும் வெறும் செய்திகளாகவே நாட்டு நடப்புகளை பார்த்து வந்தால் நாளை தங்களுக்கான சம்பவங்களாக அவை மாறும்போது கைசேதமான நிலையில் காப்பாற்றுபவர்கள் யாருமில்லாத சூழல் உருவாகும் என்பதில் ஐயமில்லை..

அரசாங்கத்தை எதிர்த்து கேள்வி கேட்டு களமாடும் துணிவு ஒவ்வொரு குடிமகனிடத்திலும் இருந்தால்தான் ஆளுபவர்களுக்கு குடிமக்கள் மீது அக்கறை இல்லாவிடிலும் அச்சமாவது அவர்களை நன்மை செய்யத் தூண்டும்..

செய்வார்களா..?

கடும் வெயிலில் சென்று
கொண்டிருக்கும்போது மழைச்சாரலின்
சில துளிகள் மேலே தெறித்தால்..

தெறித்தது மழைச் சாரல் இல்லை
தூரத்தில் சென்று கொண்டிருந்த தண்ணீர்
லாரியில் இருந்து சிதறிய தண்ணீர்த்துளி
என்று தெரிந்தால்..

இன்னும் அருகில் சென்றால் அது
தண்ணீர் லாரி இல்லை, ஏதோ ஒரு
பெருநிறுவனத்தில் இருந்து கழிவு நீர்
ஏற்றிச் சென்ற லாரி என்று தெரிந்தால்..

அந்த தண்ணீர் மேலே படாமல்
இருந்திருக்கலாம் என்று நினைப்பதைவிட,
மேலே தெறித்த கழிவு நீரை எப்படி சுத்தம்
செய்வது என்று நினைப்பதிலே நிம்மதி
இழந்துவிடுவதைப் போல..

இந்த மனநிலைதான் ஐந்து வருடங்களுக்கு
முன்பு பாஜகவைத் தேர்ந்தெடுக்கலாம்
என்று நினைத்தவர்களின் இன்றைய
நிலை..

#NoMoreBJP

சகோதரன்
.com
உங்களில் ஒருவன்